BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்
ORU PAPER

Paper - 01 Issue - 05 20 Friday August 2004 விற்பனைக்கல்ல


020 8683 1792
322-324 London Road, Croydon
020 8767 5333
78 Tooling High Street, London
DIAMONDS PALACE
MITHUS Jewellery

pg11 The letter that Chandrika did not send to Prabha!

pg19 An English Gentleman with a Tamil name?

pg09 சமபங்கை நிராகரிக்கும் சமபங்காளிகள்

pg10 சற்று மாறுதலுக்காக வேறேதாவது பேசுவோமே!




JK MiTHUN JEWELLERS
Exclusive Selection
Antique Style Traditionally Crafted Jewellery
020 8902 6304
15 Ealing Road, Wembley

SPICELAND
For your Weddings, Birthdays or any other ceremonies, call us to make your day 'cool' and satisfactory with our variety of food.
SPICELAND
FOR THE ASIAN TASTE OF SPICE CURRY
020 8667 1700
212 London Road Croydon

ரதி
23 Ealing Road, Wembley
Middlesex HA0 4TL
020 8903 3063
Open: Mon-Sat 10am - 6.30pm and Sun 12am - 6.30pm

CAR CHECK
MOT AND REPAIR CENTRE
M.O.T pertol/Diesal/Catalyst
M.O.T Repair Work
Tyres
Exhoust
Wheel Balancing
Wheel Allingment
Shock Absorbers
Servicing & Engine Tuning
Unit 17, Stonefield Close,
Off Stonefield Way,
Middlesex
020 8841 1880
OPEN: MON-SAT 8.00 AM - 6.00 PM

MortgageLINK The National Mortgage Network
100% MORTGAGE - எந்த விதமான DEPOSIT இல்லாமல் வீடு வாங்க வேண்டுமா?
ஏற்கனவே வீடு பார்த்து MORTGAGE OFFER எடுத்து வீடு கையில் வரும் நிலையில் DEPOSIT, STAMP DUTY களுக்கு காசு இல்லையா? £15, 000 பவுண் கடன் உடன் பெற்றுக் கொடுப்போம்.
COUNCIL RIGHT TO BUY எந்தவிதமான பிரச்சனைக்குரிய கவுன்சில் வீடுகளுக்கும் MORTGAGE மற்றும் மேலதிகமான பணமும் பெற்றுக்கொடுப்போம்
Mobile: 07930 62 65 85
020 8767 8487
125B MITCHAM ROAD TOOTING, LONDON SW17 9PE
YOUR HOME AT RISK IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON A MORTGAGE OR OTHER LOAN SECURED ON IT

TASTY LAND
சுவையும் தரமும் மிக்க இலங்கை, இந்திய உணவுகளை இதமாக உண்பதற்கு இன்றே நாடுங்கள்
Tasty Land Indian Srilankan Cousine
234 Ealing Rd Wembley
020 8903 8777



ஸ்ரீ ஜுவல்லர்ஸ்
110 Hoe Street, Walthamstow

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

# C.V. Construction Service Limited

32 Links Road, Tooting, London, SW17 9ET
Home No. 0208 401 6824 , Fax No. 0208 401 6824, Mobile No. 07932 626 920

Your Complete Building Services...

For Peace Of Mind...



RENOVATIONS, REFURBISHMENTS, DESIGN & DECORATING

SPECIALICED IN LOFT CONVERSION, EXTENSIONS, NEW BUILDINGS ALL ASPECTS OF BUILDING WORKS BY OUR OWN SKILLED CRAFTSMEN FROM START TO FINISH

WE DESIGN, OBTAIN PLANNING PERMISSION & WORK TO COUNCIL REQUIREMENTS

SPECIALISED IN LUXURIOUS BATHROOMS & KITCHENS

FIRM AND NEAT DESIGN மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட அசல் KITCHENS & BATHROOMS

உங்கள் வீடுகளுக்கு மெருகூட்டி பெறுமதியைக் கூட்ட எம்மை உடன் நாடுங்கள்

BRILIENT FINISH AND COLOUR OF VARIOUS DESIGNS TO CHOOSE FROM.



## 0208 401 6824

WWW.C.V.CONSTURCTIONS.COM

EMAIL: INFO@C.V.CONSTURCTIONS.COM

# குமரன்ஸ்

KUMARANS

*Wholesale & Retail*

142-144 Hoe Street,
Walthamstow, London E17 4QR

Tel: 020 8521 4955
020 8521 4411
020 8530 3033

Fax: 020 8521 9482
020 8530 5655

## வங்கி மூலம் துரித பணமாற்றுச் சேவை!!!

***Smart Money Exchange*** **to Sri Lanka, India, Pakistan, Switzerland, Germany and Canada**

**Reg. No. 121 14995 00001**

லீலா

உங்களுக்கு தேவையான லீலா மற்றும் கிருஷ்ணா தயாரிப்புப் பொருட்களை மொத்த விற்பனை விலைக்கு பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்



KRISHNA

## KUMARAN TEXTILE

136 HOE STREET
WALTHAMSTOW
LONDON E17 4QR

Tel. 020 8521 3444



e-mail: textile @ kumarans.uk.com

# கனக துர்க்கை அம்மன் தேர்த் திருவிழா






08 - 08 - 04









CEC
NEW TRANSFER SERVICE
INDIA, CANADA, USA
AUSTRALIA, EUROPE
+ 120 COUNTRIES
RING FOR DETAILS

YOU DON'T HAVE TO COME TO US
PAY AT
BARCLAYS
FOR INSTANT FASTCASH TRANSFER TO SRI LANKA
A/C NAME : C.E.C LTD
A/C NO : 70713945
SORT CODE : 20-36-47

MONEY TRANSFERS TO SRI LANKA
இலங்கைக்கான பணமாற்றுச் சேவை
நம்பிக்கை நாணயமிக்க மிகத் துரிதமான சேவை
குறிப்பிட்ட அதே நாளில் பணத்தை அங்கு பெற்றுக்கொள்ளவோ அன்றி அங்குள்ள உங்களது எந்த வங்கிக் கணக்கிலும் வைப்பு செய்ய கூடியதான வசதிகள்.

Transfer fees from only £5*

FAST CASH
WORLDWIDE MONEY TRANSFERS

- IMMEDIATE COLLECTION
- CREDIT TO ANY BANK ACCOUNT
- UNBEATABLE EXCHANGE RATES
- ONLINE TRACKING & RECEIPT
- NO CHARGES IN SRI LANKA

*FOR MORE INFORMATION CALL
020 8886 4488
FASTCASH WEBSITE FOR RATES: WWW.CECLTD.BIZ

CEC CURRENCY EXCHANGE CORPORATION LTD.
No. 125 - 127, Bramley Road, Oakwood, London N14 4UT , E - Mail : info@cecltd.biz Fax : 020 8886 4499

HSBC
Bank of Ceylon
SampathBank
PEOPLE'S BANK
SEYLAN

# பிரித்தானிய செய்திகள்

## வெள்ளையினத்தவர் மத்தியில் குறைந்து வரும் மதநம்பிக்கை



வெள்ளையினத்தை சே?ந்த பிரித்தானியர்களில் அநேகம்பேர் தங்களை கிறிஸ்தவர்கள் என அடையாளப் படுத்தினாலும் மதம் அவர்களது வாழ்வில் மிகச்சிறிய பங்கையே வகிப்பதாக ஒப்புக்கொண்டுள்ளனர் என அரசாங்கத்தால் மேற்கொண்ட ஆய்வின் மூலம் அறியக்கிடைக்கின்றது. ஆனால் கறுப்பினத்தவர், ஆசியர்கள் மத்தியில் கதை வேறுவிதமாகவுள்ளது. அவர்களது வாழ்வில் மத நம்பிக்கை முக்கியமானதாக இருப்பதாக அவ்ஆய்வு கூறுகின்றது.

இந்நிலை தொடருமாயின் அடுத்த 10 வருடங்களில் பிரித்தானியாவின் மதங்களை பின்பற்றுவோர் சம்பந்தமான வரைபடம் தற்போதுள்ளதை காட்டிலும் மாறுபட்டதாகக் காணப்படும். இளம் இந்து, முஸ்லீம், சீக்கிய மதஙகளை சார்ந்தோர் காட்டும் மத ஈடுபாடானது, இளம் கிறிஸ்தவர்களுடன் ஒப்பிடும்போது பலமடங்கு அதிகமா்னது.

உள்ளக அமைச்சு நடாத்திய கணக்கெடுப்பின்படி 74 சதவீதத்தினர் கிறிஸ்தவர்கள் எனவும், 2 சதவீதத்தினர் முஸ்லிம்களாகவும், 0.8 சதவீதத்தினர் இந்துக்களாகவும் குறிப்பிட்டுள்ளனர். 22 சதவீதத்தினர் தங்களை எந்த மதத்தையும் சேராதவர்களாக இனங்காட்டியுள்ளனர். மத நம்பிக்கையில்லாதவர்கள் எனக் குறிப்பிட்டுள்ளோரில் பெரும்பகுதியினர் வெள்ளையினத்தவர்கள்.

மத ஈடுபாடுகொண்ட வெள்ளையினத்தவர்கூட தம்மை அடையாளப்படுத்துவதில் மதத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. குடும்பம், வயது, ஈடுபாடுகள், கல்வி, தேசியம், பால், வருமானம், சமூக அந்தஸ்து ஆகியவற்றுக்கு அடுத்தபடியாகவே தமது மதத்தை நிரல்படுத்தியுள்ளார்கள்.

70 சதவிதமான கறுப்பினத்தவர்கள் மதத்தை மூன்றாவது இடத்திலும், ஆசியர்களோ இரண்டாவது இடத்தில் அதாவது குடும்பத்துக்கு அடுத்ததாக முக்கியப்படுத்தி தம்மை அடையாளப் படுத்தியுள்ளனர்.

மேலும் இவ் ஆய்விலிருந்து பெறப்பட்ட சில தகவல்கள்:

இஸ்லாம் மதமே பிரித்தானியாவில் அதிவேகமாகமாக பரவிவருகிறது. அதே சமயம் மற்ற மதங்களைக் காட்டிலும் இஸ்லாம் மதத்தை பின்பற்றுவோர் பொருளாதாரத்தில் பினதங்கிய குடியிருப்புகளில் வசித்து வருகின்றனர்.

88 சதவீதமான சீக்கிய மதத்தை சேர்ந்தோரும் 76 சதவீதமான இந்துக்களும் 74 சதவீதமான கிறிஸ்தவர்களும் பட்டப்படிப்பை அல்லது நிகரான கல்வித்தகமைகளை கொண்டுள்ளபோது 52 சதவீதமான இஸ்லாமியர்களே இவ்விதமான தகமைகளை கொண்டுள்ளனர்.

## சட்டத்தரணி மீது விசா மோசடிக் குற்றச்சாட்டு

ஐரோப்பிய சமூக ஒன்றிய உடன்படிக்கையின்படியான (European Community Association Agreement) அனுமதி முறைகளை (Visa) துஸ்பிரயோகம் செய்து சாதாரண ருமேனியார்களுக்கு பிரித்தானியாவுக்குள் நுழைய அனுமதி பெற்றுக் கொடுத்ததாக வின்ச்மோர் ஹில் என்னுமிடத்தை சேர்ந்த கிறிஸ்ரோபர் கிறிஸ்ரோடௌலியஸ் என்ற 37 வயதான சட்டத்தரணி மீது வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

ருமேனிய அரச அதிகாரிகளின் துணையுடன் பிரித்தானிய குற்றப் புலனாய்வு பிரிவும் மெற்றோ பொலிட்டன் பொலிஸ் பிரிவினரும் இணைந்து நடாத்திய "ஒப்பரேசன் மக்ஷிம்" நடவடிக்கையின்போது கிறிஸ்ரோபர் கைது செய்யப்பட்டார்.

ECAA விசா நடைமுறைகள் பிரித்தானியாவில் தமது சொந்த வியாபாரங்களை ஆரம்பிக்க முனைவோருக்கு விசா வழங்குவது சம்பந்தமானது. இவ்விதிமுறைகளை தப்பாக பாவித்து சாதாரண ருமேனியர்களுக்கு விசா பெற்றுக் கொடுத்ததாகவும் பிரித்தானிய உள்துறை அமைச்சை ஏமாற்ற முனைந்ததாகவும் கிறிஸ்ரோபர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.



முன்னர் தேசிய கணக்காய்வாளர் அலுவலகம் இவ்விசா நடைமுறைகளில் பல ஓட்டைகள் உள்ளதாக தெரிவித்திருந்தது. இவ்விதிமுறைகளில் உள்ள ஓட்டைகளை பாவித்து ருமேனியர்களும் பல்கேரியர்களும் நாட்டுக்குள் வருவதாக எழுந்த குற்றச்சாட்டையடுத்து, கடந்த ஏப்பிரலில் உள்ளக அமைச்சர் பெவர்லி கியுஸ் தனது பதவியை துறந்தார். ஆனால் இக் குற்றச்சாட்டுக்களை பெவர்லி கியுஸ் அப்போது மறுத்திருந்தார்.


## சாதனை படைத்த ஏ லெவல் முடிவுகள்



நேற்று வெளியான உயர்தர பாடசாலை முடிவுகள் ஒரு புதிய சாதனையைப் படைத்துள்ளன. 96 சதவீதமானவர்கள் இம்முறை சித்தியெய்தியதாக ஊடகங்களுக்கு வெளியான செய்திகளிலிருந்து தெரியவருகிறது. இவர்களில் ஐந்தில் ஒரு மாணவர்கள் ஏ தரத்திலான சித்தியை பெற்றுள்ளார்கள்.

இந்த முடிவுகள் கடந்த ஆண்டைக் காட்டிலும் 0.6 சதவீதம் அதிகமானது. ஏ தர சித்தியிலும் சிறு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இம்முடிவுகள் 22 தடவையாக தொடர்ந்து அதிகரிப்பை காட்டுகின்ற போதும், உயர்தர பரீட்சையின் தரம் வெகுவாக குறைந்துள்ளதாக பலத்த விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. ஆனால் அரசாங்கமோ மாணவர்களின் கடின உழைப்பே இம்முடிவுகளுக்கான காரணமென இவ்விமர்சனங்களுக்கு பதிலளித்துள்ளது.



இதேவேளை மத்திய வகுப்பை சேர்ந்த மாணவருக்கு இப்போது வாய்ப்புக்கள் அதிகமாகவிருப்பதால் அவர்களால் மற்ற வகுப்பை சார்ந்த மாணவர்களைக் காட்டிலும் நல்லபெறுபேறுகளை பெறக்கூடியதாக இருப்பதாக பாடசாலை தரம்பேணும் அமைச்சர் டேவிட் மில்பாங் தெரிவித்த கருத்தை ஆசிரியர் சங்கங்களும் ஆதரித்துள்ளன.

## ஓய்வூதிய காலத்தின் பின்பும் பணிபுரியும் ஒரு மில்லியன் பேர்



தேசிய அளவில் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களின்படி ஒரு மில்லியனுக்கும் சற்று அதிகமான தொகையினர் ஓய்வூதிய வயதை தாண்டி தமது எழுபது எண்பது வயதிலும் பணியிலிருப்பதாக கணிப்பிடப்படடுள்ளது. போதிய ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ள முடியாத நிலையிலிருப்பதாலேயே இந்த வயதிலும் வேலை செய்ய வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக இப்புதிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்த வயதில் ஓய்வெடுப்பதை விடுத்து முடிந்தவரை வேலை செய்யவேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது. ஓய்வூதிய வயதெல்லையை 70 ஆக அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளபோதும், இவ் அதிகரிப்பால் எதிர்காலத்தில் பிரித்தானிய வேலையாளர்களில் பெரும்பகுதி பணிபுரிய விருப்பமில்லாத வயோதிபர்களை கொண்டதாகவிருக்கும் என அஞ்சப்படுகிறது.

போதுமான ஓய்வூய்தியம் இல்லாமையால் பொருளாதார நெருக்கடிகளை எதிர் நோக்க வேண்டிவரும் என்ற எதிர்பார்ப்பே 60 வயதுக்கு மேற்பட்டவர்களை கடுமையாக வேலைசெய்யத் தூண்டுவதாக ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

2006ம் ஆண்டில் அமுலுக்கு வரவிருக்கும் பாகுபாடுகளுக்கு எதிரான சட்டமூலத்தின்படி, வயது அதிகரிப்பை காட்டி வேலையிலிருந்துஒருவரை நீக்குவது சட்டவிரோதமாக கருதப்படும்.

இதற்கிடையில் 2020 ஆண்டளவில் சனத்தொகையில் அரைப்பங்குக்கு மேலானோர் 50 வயதிற்கு அதிகமானவர்களாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.


AIR SAVERS
TRAVEL AGENTS




நம்பிக்கை, நேர்மை, உத்தரவாதம்
உங்களுக்கு திருப்திகரமான துரித சேவை
குறைந்த செலவில் உலகின்
எப்பகுதிக்கும் பயணம் செய்ய அழையுங்கள்.

open 7 days a week
All major credit cards accepted

020 8540 2226

ATOL 4848

*near by South Wimbledon tube station*
36 Merton High Street, South Wimbledon, SW17 1AU
Website: virtual.towns.com, email: bparam@aol.com

உங்கள் விளம்பரங்கள்

உங்கள் விளம்பரங்கள்
ஒரு பேப்பரில்!

அழையுங்கள் :
020 8640 4604

PERMA
INTERNATIONAL SHIPPING LTD

உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள், வாகனங்கள், வீட்டுப் பாவனைப்பொருட்கள், இயந்திர உபகரணங்கள், போன்றவற்றை தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ அனுப்ப விரும்புகிறீர்களா?

இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும்

தரமான பிரத்தியேக சேவைக்கு நாடவேண்டிய இடம்

PERMA
INTERNATIONAL SHIPPING LTD
தொடர்புகளுக்கு: சிவம்

45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL
Tel: 020 8646 5222, Fax; 020 8646 5557
Mobile; 07939 550397

# மக்கள் களம்

### சுவை, சுவாரஸ்யம், நகைச்சுவை. .

ஒரு பேப்பரின் மூன்று வெளியீடுகளையும் இணையத்தளத்தில் பார்த்தேன். ரசித்தேன்.

சிலர் கோபாவேசத்தில் வார்த்தை களைக் கொட்டிய விதத்தில் சற்று அதிருப்தியும் அடைந்தேன்.

இலவசம் லண்டனில்தான். எனக்கு இணையத்தில் ஒவ்வொரு பக்கமாகத் தேடுவதில் சிரமம் தெரிகிறது.

எல்லாப் பக்கங்களையும் பார்க்க முடியவில்லை. ஆனாலும் இலவசமாகப் பார்த்த பக்கங்களில் சுவை, சுவாரஸ்யம்.. நகைச்சுவை.. என்று பலதும் கண்டு மகிழ்ச்சி. மேலும் வளர வாழ்த்துக்கள்.

நட்புடன்,
சந்திரவதனா
Germany

### ஒரு மண்ணும் விளங்கவில்லை

ஒருபேப்பரை தொடர்ந்து வாசித்து வருகிறேன். அதில் வருகின்ற விஷயங்கள் யாவும் பலே ஜோர். ஒருபேப்பரில் வருகிற English தான் ஒன்றும் விளங்கவில்லை. முழுவதும் தமிழ் பேப்பர் ஆக்கினால் என்ன?.

கோ.டேவிட்ராஜ்
Mitcham

### அன்பே சிவம்! இதுதானா அர்த்தம்

எல்லாளன் எழுதிய கோவிக்காமல் கொஞ்சம் யோசிங்க என்ற பகுதியில்தான் அன்பே சிவம் என்பதன் அர்த்தம் விளங்கியது. எல்லாளன் அவர்களே, உங்களிடம் இப்படி இன்னும் எதிர்பார்க்கிறோம்.

பா.நேசரத்தினம்
Rayners lane

### ஓடிவிட்டார்களா

ஒருபேப்பர் 4இல் சொக்கநாதனைக் காணோம், சேயோனைக் காணோம். எல்லோரும் லீவில் ஊருக்குப் போய் விட்டார்களோ? லீவை முடித்துக் கொண்டு ஓடி வரச் சொல்லுங்கள். ஒருபேப்பரை விட வேறென்ன வேலை அவர்களுக்கு?

வலன்ரைன்.ஜே
Lewisham

### தமிழ்ப்பற்றா? கிலோ என்ன விலை?

கம்பன், காளமேகம், என்று தமிழில் நன்றாக எழுதிய கவிஞர்களின் கவிதைகளைத் தந்துவிட்டு அதனை ஆங்கிலத்தில் Old is Gold என்று தலைப்பிடுகிறீர்களே? என்ன ஐயா நீங்கள்? தமிழ்ப்பற்று இல்லையா? தமிழ்ப் பற்று இருந்தால் ஒருபேப்பர் என்று பேர் வைத்து இருப்பீர்களோ?

மகரிஷி
Vauxhall

### வழமைக்கு வருகிறது

வாலிபர்கள் மது அருந்திவிட்டு தியேட்டருக்கு வருவது வழமையாகி வருகின்றது. வன்முறையில் இறங்குவதற்கு இதுதானே காரணம். இவர்களுக்கு உதவ ஏன் தமிழர் அமைப்புக்கள், மற்றும் இலாபநோக்கற்ற பிற அமைப்புக்கள் முன்வரவில்லை

பரா கணபதி
Croydon

### எங்கிருந்து 'சுடு' கிறீர்கள்

ஒரு பேப்பரில் வருகின்ற சினிமாப் பக்கம் மற்றய பேப்பரில் இருந்து வித்தியாசமாக இருக்கின்றது. மனநிறை வையும் தருகின்றது. விசயங்களை எல்லாம் தருகிறீர்கள். விசயங்களை எல்லாம் எங்கு தேடி எடுக்கிறீர்கள்.

யோ.தருமரட்னம்
Eastham

### நீயுமா, புருட்டஸ்?

சிறுகதை என்று தலைப்பிட்டால்தான் எங்களுக்கு அது சிறுகதை என்று விளங்கும்?.

எங்களை அவ்வளவு முட்டாள்களாக நினைத்துவிட்டீர்களா? ஒருபேப்பர் நீங்களுமா?

ஈஸ்வரநிதி
Kingsbury

### சித்திரவதையோ?

சிங்கள, சீமைச் சித்திரவதைகள் பற்றி ஒரு கவிதை பார்த்தேன் பற்றி எரிந்தது உள்ளுக்குள். காரணம் இரண்டையும் ஒப்பிடுவதுபோல் எழுதப்பட்டு இருந்ததுதான். ஐயா! எழுதினவரே தனித் தனியே எழுதி இருந்தால் அழகாக இருந்திருக்கும் அருகருகில் எழுதி அழுக்காக்கி விட்டீர்கள். சிங்கள சித்திரவதைகள் பற்றி ஒப்பிடுவதாயின் நரகத்தினை ஒப்பிடுங்கள்.

கபிலன்
Wimbledon

### ஒன்று சொல்லவேண்டும்

ரவிசங்கர் மரணம் பற்றி எழுதி இருந்தீர்கள், ஏன் இப்படி அமைதி என்று தமிழ் அமைப்புக்களை கேட்டிருந்தீர்கள், நீங்களும் அக்கறையாக இருக்கிறீர்கள், கண்டு மகிழ்ச்சி அடைந்தேன்.

காண்டீபன்
South Wimbledon

### அந்தமாதிரி போட்டுத் தாக்கி இருக்கிறார்கள்

மைக்கல் மூரின் பரனைட் பார்த்தேன் பாவம் புஷ், அவரை வெறும் புஸ்வானம் ஆக்கிவிட்டு இருக்கிறார்கள் என்றாலும் அந்த பழைய புஷ் விசயகாரர்தான், விமர்சனத்திற்கு நன்றி இல்லாவிட்டால் பார்த்திருக்க மாட்டேன்.

ரதன்
Tooting

### போட்டோகாரர் மாட்டினார்

ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத் தேர்த் திருவிழாவில் ஒரு பேப்பர் போட்டோகாரரைப் பார்த்தேன் வெள்ளையும் சொள்ளையுமாக வந்திருந்தார். ஒரு தனிப் போட்டோ எடுக்கச் சொல்ல ஏலாது சொல்லிவிட்டார். கடைசியாக என்னுடைய பழைய போட்டோவைதான் பொம்பிள வீட்டாருக்கு கொடுக்க வேண்டியதாக போய்விட்டது

ரமணன்
Morden

### அப்ப சிவனுக்கு தமிழ்த் தெரியாதோ?

யாரிடம் கேட்பதென்று அடிக்கடி யோசிப்பேன் இப்போ உங்களால் பலரிடம் கேட்கும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. விசயம் இதுதான், இஸ்ரேல் நாட்டு இயேசுநாதருக்கே தமிழ் தெரியும் (தமிழில்தான் பூசை நடக்கிறது) ஆனால் ஏன் எங்கள் தமிழ்க் கடவுள் சிவபெருமானுக்கு தமிழ் தெரியாது (சமஸ்கிரதத்தில் பூசை நடக்கிறது). யாராவது பதில் தெரிந்தால் சொல்லுங்கள்

காந்தன்
Ilford

### பாயுது குதிரை பாயுது பார்

அண்மைக் காலங்களாக எங்கள் தமிழ் சமூகத்திற்குள் குதிரைப் பந்தயத்தில் பணம் போடும் பழக்கம் ஆரம்பித்து விட்டது. என் நண்பர் ஒருவரும் இந்தப் பழக்கத்திற்கு அடிமையாகி விட்டார். தவறெனச் சொன்னபோது 'லொட்டறி' எடுப்பது சின்ன லெவல் இது பெரிய லெவல் என்கிறார். முடிந்தால் ஏதாவது எழுதுங்கள். பிரியோசனமாய் ஏதாவது செய்யவேண்டும் என்பீர்கள் அதனால் தான் எழுதுகிறேன்.

மரியதாஸ்
Acton

## காக்க காக்க . . .

### சடங்கு

அண்மையில் ஒரு கிறிஸ்தவத் திருமண விழாவுக்கு சென்றோம். அங்கு வழக்கம்போல நண்பர்களுடன் வெளியே நின்று அரட்டையடித்துக்கொண்டிருந்தேன். வரவேற்பு விழா தடல்புடலாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. எனது பக்கத்திலிருந்த ஒரு நண்பன் திடீரென்று கேட்டான், 'நீ கலியாணம் முடிச்சிட்டியோ?' என்று. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இவன் என்னுடைய கல்யாண வீட்டுக்கு முழுவேலையும் பொறுப்பெடுத்துச் செய்தவன்..... ஏன் இப்படிக் கேட்கிறான்....

'ஓம் முடிச்சிட்டன்' என்று சொன்னேன்.

'கலியாணம் எங்கை நடந்தது?'

'சிவன் கோயிலிலைதானே.... இப்ப எதுக்கு இதெல்லாம் கேக்கிறாய்?...'

'அப்ப நீ கலியாணம் முடிக்கேக்கை பொம்பிளைக்கு கூறை குடுத்தனியோ?'

இதென்னடா இது... சம்பந்தா சம்பந்தமில்லாமல்...

'ஓம்'

'கூறை ஏன் குடுக்கிறது எண்டு தெரியுமோ?....'

ஏன்?... ஏன்?... எனக்குத் தெரியவில்லை...

'கூறை குடுக்கிறது எங்கடை சம்பிரதாயம் அதுதான்.' என்றார் மற்றொரு நண்பர்.

'இதைப் பாருங்கோ' என்று சொல்லி நண்பர் எங்களை உள்ளே அழைத்துச் சென்றார்.

அங்கு ஒரு வைபவம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. மணமகன் மணமகளுக்குக் கூறை கொடுக்கும் நிகழ்ச்சி. ஒரு பாதிரியார் கூறை என்றால் என்ன அதனை வழங்குவதன் அர்த்தம் என்ன என்று முதலில் தமிழிலும் பின்னர் ஆங்கிலத்திலும் விளக்கமளித்த பின்னர் அந்த நிகழ்ச்சி தொடங்கியது. அங்கிருந்த தமிழ் மக்களும் ஆங்கிலேயர்களும் கூட இதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்டனர்.

எனக்கு மிகவும் வெட்கமாக இருந்தது. நாங்கள் சடங்குகள் சம்பிரதாயங்கள் என்ற பெயரில் விளங்காமலேயே பலவற்றை செய்து வருகின்றோம். என்னுடைய கலியாண வீட்டிலும் ஐயர் இந்த விளக்கங்களைச் சொல்லியிருப்பார். ஆனால் எனக்கோ மற்றும் பலருக்கோ புரியாத சமஸ்கிருதத்தில் சொன்னால் நாங்கள் என்ன செய்யமுடியும்?

வெறுஞ் சடங்காகவே முடியும்!

— நாயகன்.

### மாமிமார்களுக்கு மவுசு

குழந்தை பராமரிப்பு செலவு காரணமாக எல்லா மருமக்களும் தங்கள் மாமிமாருக்கு கடும் மரியாதை கொடுக்கிறார்களாம். அதனால் நாட்டிலிருந்தும் இவர்களை அழைக்கிறார்களாம். இதில் சிக்கல் என்னவென்றால் பிள்ளைகள் பல நாடுகளில் வாழுவதனால், தாங்கள் அங்கும் இங்கும் என்று அலைய வேண்டி உள்ளதாக மாமிமார் கவலை தெரிவிக்கிறார்கள். ஆனால் உண்மை என்னவெனில் பிள்ளைகளை பார்க்கிறோம் என்றுவிட்டு உள்ள சீரியல் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு தொலைபேசியில் விமர்சனம் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள் இந்த மாமியார் பட்டாளம்.

உமா
Thornton Heath

வாசகர் கவனத்திற்கு,

தங்களது கருத்துக்களை சுருக்கமாக எழுதி அனுப்புவது பல வாசகர்களின் மடல்களைப் பிரசுரிக்க இடமளிக்கும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவிக்கிறோம்.

— ஆசிரியர்


அரங்கேற்ற மலர்கள்
அழகாய் அரங்கேற
Full Colour specialists
Origination &
Design studios
Computer to Plate
Nexscan Heidelberg
Vasan Printers
45A, Crusoe Road, Mitcham, Surrey CR4 3LG
telephone 020 8646 2885
fax 020 8401 8612
isdn 020 8640 8251
mobile 07903 425 671

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, AUGUST 20, 2004, ISSUE 05

## அருகி வரும் வாசிக்கும் பழக்கம்

வாசிப்பே மனிதனை பூரணப்படுத்துகின்றது என்பது அறிஞர்கள் கண்டறிந்த உண்மை. வளர்முக நாடுகளில் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துதற்கு சர்வதேச நிறுவனங்களால் பல செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், வளர்ச்சியடைந்த நாடான பிரித்தானியாவில் புலம்பெயர்ந்து வாழும் எமது தமிழ் சமூகத்தவர் மத்தியில், வாசிக்கும் பழக்கம் வெகு குறைவாகவே காணப்படுகின்றது.

எமது வரவேற்பறைகளை பலவிதமான இலத்திரனியல் சாதனங்களாலும், அழகுப் பொருட்களாலும் அலங்கரித்து வைத்துள்ளோம். இவற்றுக்காக பெரும் பணத்தையும் செலவு செய்கின்றோம். ஆனால் அறிவு தரும் நூல்களுக்கு செலவிடுவதில் மட்டும் பெரும் கஞ்சத்தனத்தைக் காட்டு கின்றோம். போதாக் குறைக்கு நேரமின்மையை சாட்டாக கூறுகின்றோம்.

தமிழ் நாட்டில் தயாராகி எமது வரவேற்பறைகளுக்கு நேரடியாகவே வரும் 'சீரியல்கள்' எனும் தொடர் நாடகங்கள் அல்லது கலாச்சாரச் சீரழிவு குப்பைகள். எங்களில் பலரினதும் ஓய்வு நேரத்தை முழுமையாகவே விழுங்கி விடுகின்றன. வேறு நேரம் கிடைத்தால் இவை பற்றி அளவளாவுவதிலேயே எமது காலம் கழிகின்றது.

இந்த நாட்டு குடிகளின் வாசிக்கும் பழக்கம் கூட இவ்விடயத்தில் எங்களை தொற்றிக் கொள்ளவில்லை. தினசரி காலை தொடருந்தில் விழுந்தடித்துக் கொண்டு ஏறும்போதும் அவரவர் தமக்கு பிடித்தமான பத்திரிகைகள், புத்தகங்களுடன்தான் ஏறுகிறார்கள். ஆனால் நாம் பாரம்பரியமாகவே கிரகித்தலிலும், அளவளாவுவதிலும் செலுத்தும் அக்கறையை வாசித்தலில் செலுத்துவதில்லை. இலவசப் பத்திரிகைகள் ஓரளவுக்கு வாசிக்கும் பழக்கத்தை தூண்டினாலும், இதுவிடயத்தில் எம் மக்களின் அக்கறை போதுமானதாக இல்லை.

இன்று தமிழ் ஆங்கிலம் இவற்றில் குறைந்தது ஏதாவது ஒரு மொழியிலாவது வாசிக்கத் தெரியாத ஒருவராவது எமது சமூகத்தில் இருக்கின்றாரா என்பது சந்தேகமே.

ஆகவே வாசித்தல் பழக்கத்தை ஏற்படுத்துவதற்கு வெறும் ஆர்வம் மட்டுமே தேவையானது.

இங்கு ஆறுதல் தருகின்ற விடயம், இந்நாட்டில் எமது பிள்ளைகளுக்கு வாசித்தலின் அவசியம் பாடத்திட்டங்களாலேயே வலியுறுத்தப்பட்டுள்ளது..

ஆனால் இந்த விடயத்திலும் வளர்ந்தவர்கள்தான் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகளை உங்கள் இல்லங்களுக்கு எடுத்துச் செல்லுங்கள். வாசிக்கும் பழக்கத்தையும் ஏற்படுத்துங்கள்.

# ஒரு பேப்பர் . . . . . . . . .

*ஒரு பேப்பர் வாசிப்போரே...*

*அன்பு கனிகிற வணக்கம்...*

*என்ன... ஒருவிதமான நடையில தொடங்கி விட்டார் ஆசிரியர் எண்டு நீங்கள் நினைப்பது தெரிகிறது...*

*நீங்கள் யார்...?*

*ஒரு பேப்பர் இருக்கிற நிறுவனங்களில் எல்லாம் ஒரு பேப்பர் கூட மிச்சம் வைக்காம ஒரு பேப்பரை அள்ளிக் கொண்டு போற வாசக நேசர்கள்.*

*உங்களை,*

*ஒரு பேப்பரை பார்ப்போர்...*

*ஒரு பேப்பரை சேர்ப்போர்...*

*ஒரு பேப்பரை காப்போர்...*

*என எப்படியும் அழைக்கலாம்.*

*வாசகர்களைக் குளிர்மைப்படுத்தும் வழக்கமான பத்திரிகைத் தனம் கொண்ட சொல் விளையாட்டு என்று எண்ண வேண்டாம்.*

*இந்தச் சமூகத்திற்கு ஏதாவது ஆக்கபூர்வமாய் செய்ய வேண்டும் என்கிற எங்கள் உற்சாகத்தை காக்கின்ற பொறுப்பு உங்களுக்குரியது. அதைச் செவ்வனே செய்கிறீர்கள் நன்றி...*

*பத்திரிகை நடத்த வேண்டும் என்ற எவ்வித வீம்போ, வீறாப்போ எம்மிடம் இல்லை. சமூக நோக்கில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற தீ எம்முள் இன்னமும் கனன்று கொண்டிருக்கின்றது.*

*ஒரு பேப்பருக்குள் இருக்கும் கந்தசாமிக்கோ, கணபதிக்கோ, நந்தனுக்கோ, நாயகனுக்கோ தனித்த புகழ் எதனையும் பெற்றுக் கொடுக்கும் இலக்கு ஒரு பேப்பருக்கு இல்லை.*

*வாசகன் என்ற தரத்திலான உங்கள் தேவைக்குத் தரமான தீனியைத் ஒரு பேப்பர் தரவேண்டும். அதற்காக, நடிக நடிகையின் படுக்கை நெளிவு சுழிவுகளோ, அல்லாவிடின் பேரப் பேச்சினால் சோரம் போன வார்த்தைகளோ ஒரு பேப்பரில் இடம்பெற மாட்டாது*

*திருமணமாகி முற்றிலும் புரிந்து கொள்ளாத கணவன் மனைவியரைப் போலவே இன்னமும் நாமும் நீங்களும். உங்களுக்குள் உள்ளிறங்கி நீங்களாகவே மாற ஒரு பேப்பர் விரும்புகின்றது. என்ன செய்யவேண்டும் உங்களுக்கு..? தினமும் எண்ணிப் பார்க்கிறோம், உங்கள் வாசக ரகசியம் முற்றிலுமாய் உணர முயற்சிக்கிறோம்.*

*உங்களுக்கு களம் அமைத்து தருவதே எங்கள் பிரதான நோக்கம், களமிறங்க உங்களுக்குத் தேவையானதோ சரியான ஊக்கம். களத்தினை அமைத்து விட்டோம் நாங்கள், துணிந்து இறங்கலாம் இனி நீங்கள்.*

*என்னடா இந்தமுற அமத்தி வாசிக்கிறாங்கள் எண்டு சிலபேர் நினைப்பினம். . அவையள சந்தோஷப்படுத்த...*

*இங்க வெளியாகிற ஒருபேப்பர் கனடா, ஜேர்மன் வரை எட்டி இருக்குது, அங்க இருந்து எங்களுக்கு ரெண்டு மூண்டு கடிதங்கள் வந்தது. ஆனால் இஞ்ச இருக்கிறவயள் மட்டும் எங்களுக்கு எண்டா உந்தப் பேப்பர் ஒண்டும் கிடைக்கிறேல எண்டபடிதான் இன்னும் இருக்கினம், எங்களப் பிழை சொல்லிக் கொண்டு.*


EDITORIAL

# Sri Lanka : The Man who sets the Agenda

*(Exactly eight years ago, in August 1996, the following editorial comment appeared in the issue of Hot Spring, a "Journal of Commitment" published from France. Eight years later, what was written then, remains as relevant now, as it was then. We reproduce that comment in full)*

"Political power, as is known, lies with Presidents, Prime Ministers and Heads of State. It is the office that they hold that gives them the authority (if not the wisdom) to determine the political fate of the countries they head. Why does it happen therefore that in a country like Sri Lanka, where the constitution itself bestows extraordinary powers to the President - powers unmatched by those of a Clinton or a Chirac - that the incumbent in office looks powerless either to carry forward her mandate for peace, or rescue her country from being bogged down in war? The answer is simple. The one who is determining the political and military agenda in Colombo is nowhere near Colombo , holds no office, sports no military title, but what is more ridiculous, he carries a price on his head and is known in Sri Lankan terminology as a "terrorist"!

We know of terrorists planting bombs in secret, but where in the world do you get over 1,000 "terrorists" in uniform , and in full view, attacking a well-fortified army camp, overrunning it, wipe out the entire garrison, and taking away heavy weaponry? Is it not obvious that the Sri Lankan terminology is



***The man in the driving seat***

flawed? Once the terminology is flawed, the thinking gets erratic, and the entire behavioural pattern gets muddled. That is the basic semantic self-deception that is preventing successive Sri Lankan governments from making any headway in its 13-year old war against the Tamils. You keep on calling a powerful liberation force like the Tigers as "terrorists" till you are blue in the face, but that only help you display your anger - your helpless anger at that - but will never help you to come to touch with cold reality.

**Careless use of the word "terrorist" could also result in ultimate embarassment. Some "terrorists" of yesterday have the habit of turning up to be tomorrow's "Your Excellencies" Some even end up receiving the Nobel Prize for Peace!**

If Tiger leader Velupillai Pirabhakaran is not a "terrorist", what kind of man is he? Years ago, a veteran Sinhalese editor voted him – The Man of the Decade – and carried his photograph on the cover of his journal, *Lanka Guardian*. A religious man, Bishop Kenneth Fernando, a Sinhalese himself, saw in him a "humane person". Some military analysts describe him as being in the category of a ***"military genius"*** To the thousands and thousands of Tamil youths, men and women, who go smiling to their deaths, he is a demi-God.

Last April, an Australian newspaper sent its Asia Desk editor Norman Aisbett to the northeast. He interviewed "Thamilaval" a Tigress whom he describes as a 25-year old battle veteran and asked her what she thought of Pirabhakaran. *"My impression of him cannot be described in words"*, she said, *"I am just proud to have been born in the age of the Leader"* To millions of Tamils today, spread all over the world, he is the messiah, come to deliver. Dravida Kalagam leader in Tamil Nadu was once quoted as saying *"There is only one Thiruvalluvar, one Kamban and one Pirabhakaran"* If such be the composite image that he conjures up in the minds of assorted people, it seems to us that President Kumaratunga's celebrated quote supplied to her user-friendly Indian journal *India Today* ("A merciless megalomaniac") is a trifle inadequate.

Madame President has only one Pirabhakaran to contend with. But it has to be remembered that the Tamil leader has seen three Presidents before her come and go. He has seen three War Ministers from Lalith Athulathmudali to Ranjan Wijeratne to the present Uncle General. He has seen ten Indian Major Generals in the northeast in his time, not to mention dozens of Sri Lankans with pips and ribbons and swagger sticks. And, he has not been trained in Sandhurst or Lebanon or in any military academies, not even in Wirawila So what makes him tick? What makes the Tigers such a formidable force that Israeli weapons and Chinese gunboats and American training do not daunt them? In trying to get the right answers to these questions lies the hope for peace in Sri Lanka. And the day the Sri Lankan government and the Colombo Press and the Sinhalese people stop throwing the word "terrorists" around will be the day when wisdom will dawn and peace prevail in that island so favoured by Nature but so sadly brought to the brink of ruin by its leaders. That will also be the day when the Sinhalese people take control of their own destiny and the Tamil people of theirs.

கருத்து

# கோவிக்காமல் கொஞ்சம் யோசிங்க . . .

எல்லாளன்

இன்று நாங்களும் திரைப்படங்கள் எடுக்க வேண்டும் என்கிற ஆசை புலம்பெயர்ந்த பல தமிழர்கள் இடையே துளிர்த்து வருவதனை காணக்கூடியதாக இருக்கிறது. இந்த நேரத்தில் இவ்விடயம் குறித்து எழுதுவதே சாலச்சிறந்தது என எண்ணுகிறேன்.

நாம் வாழும் இந்த நாடுகள், பொதுவாக எல்லா துறைகளிலும் உச்ச நிலையிலேயே இருக்கின்றன இப்படியான நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கு எங்களின் திரைப்படங்கள், எப்படியான ஒரு தரத்தினை உடையதாக இருக்கின்றது? இதுபற்றி நான் சொல்லி நீங்கள தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

பத்துப்பேர் ஒன்று கூடுவார்கள், திரைப்படங்கள் எடுக்கவேண்டும் என்கின்ற தங்கள் ஆசை பற்றி அதில் சிலர் பேசுவார்கள் 'எடுக்கிறமடா' என்று ஒரு எதிர்கால சபதம் ஒன்றினை இடுவார்கள். இது எப்படி உங்களுக்குத் தெரியும் என்று கேட்கவேண்டாம், எனக்குத்தெரியும். பின் இவர்கள் அறிமுகமான சிலருடன் 'சீரியசாக' பேசுவார்கள், நடிகர்கள் தேடுவார்கள்? பணம் என்பார்கள் சேவை என்பார்கள். இப்படி ஒவ்வொரு விடயமும் வளர்ந்து கொண்டு வரும், அதன் பின் படமும் வெளியில் வரும்.

இப்படத்தினை அனேகமாக ஆலயங்களிலேயே (ஆண்டவனின் அருளுக்காகவோ என்னவோ) காண்பிப்பார்கள். ஆக இவர்கள் திரைப்படம் என்று 'ஏதோ' ஒன்றை எடுத்து இருக்கிறார்கள் என்ற அந்த முயற்சியினை பாராட்டலாம், அதாவது கொலம்பஸ் இந்தியா என்று எண்ணி மேற்கிந்திய தீவுகளை கண்டுபிடித்தது போல ஆனால் நிச்சயமாக அந்த படத்தினை யாராலும் பாராட்ட முடியாது, ஏனெனில் அது படமே அல்ல அதையும் தாண்டி.....

தானும் எடுக்காமல் எடுப்பவனையும் விடாமல்..... என்று சிலர் பொங்கி எழுவீர்கள். நான் இப்படி எல்லாம் எழுதுவதால் எனக்கு விருது ஒன்றும் கிடைக்கப் போவதில்லை. இத் துறையில் எங்கள் நிலை குறித்து சற்று எண்ணிப் பார்ப்பதில் தவறில்லை என்றே தோன்றுகிறது.

சாதாரணமாக, வீடுகளில் இப்படத்தின் பிரதியினை போட்டுப் பார்த்தால் ஏதோ பிறந்த நாள் கொண்டாட்டம் என்றோ திருமண வீட்டில், கை கலப்பினையும் சேர்த்து தவறுதலாக எடுத்து விட்டார்களோ என்றெல்லாம் தோன்றும்.

ஒரு முறை நான் படைப்பாளி ( ?? ) ஒருவரின் வீட்டிற்குச் சென்றிருந்தபோது தொலைக்காட்சியில் ஒருவர் ஒரு சிறுவனுடன் பாக்கில் விளையாடிக் கொண்டிருந்தார். அது அவருடைய திரைப்படம் என்று எனக்குத் தெரியாது, நான் அவரிடம் அவர் சொந்தக்காரரா? என்று கேட்டேன், ஆம்! என்றார், எங்க கனடாவிலா இருக்கிறார்? என்றேன், இல்லை! என்றார், பின்ன ஈரோப்பா? என்றேன், ச்ச...இந்தாள் இங்கதான் இருக்குது என்றார், பிற கேன் இப்படி இவரை TVல பார்க்கிறீங்கள் என்றேன், இது என்ர படம் ஐசே! என்றார்.

நான் என்ன செய்வது பாக்கில் ஒருவர் ஒரு சிறுவனுடன் விளையாடும்போது எனக்கு இது ஒரு படம் என்கிற உணர்வினை அந்தப்படம் தந்திருக்க வேண்டும், ஆனால் நான் யாரோ ஒரு உறவினர் தன் மகனை வீடியோ எடுத்து இவருக்கு அனுப்பி இருக்கிறார் என்றுதான் நினைத்தேன்.

நான் இந்த திரைப்பட முயற்சியினை பற்றி பேசியபோது அவர் கடும் சிரத்தையெடுத்துத்தான் இம்முயற்சியில் வெற்றி பெற்று இருக்கிறார் என்று உணர்ந்தேன் (வெற்றி என்று நான் சொல்வது படத்தினை முழுதாய் எடுத்து முடித்ததையே )

அதற்காக இப்படியான ஒரு படத்திற்கு அவரை நான் எப்படிப் பாராட்ட முடியும்?.

இந்தியச்சினிமாவில் எத்தனையோபேர் சேர்ந்து முழுநேரமாக திரைப்பட முயற்சியில் ஈடுபடுகிறார்கள் ஆனால் நாங்கள் அப்படி அவர்கள் போல் இயங்க முடியாது, இது எங்களுக்கு பகுதிநேர வேலை போலத்தான், என்பது பலரின் வாதம்.

உண்மைதான்இப்படி முழுநேரமாக இயங்க முடியாது என்று வைத்துக்கொள்வோம், ஆனால் இந்த முயற்சியில் இறங்கும் எத்தனைபேருக்கு

திரைப்படத்தினை எப்படி உருவாக்குகிறார்கள் என்று தெரியும்? அதாவது Plot, Story, Subplot, Screenplay, Dialogue, Storyboard, Direction,Cinematography, இப்படி நீளும் பட்டியல் குறித்த அறிவு எத்தனைபேருக்கு உண்டு. இதனை விட்டுவிட்டு ஒரு கமெராவையும் இரண்டு லைட்டுகளையும் தூக்கிக்கொண்டு நல்ல கதை கிடைச்சிருக்கு படமெடுக்கிறம் என்று எடுத்தால் எதிர்காலத்தில் அவரவர் சொந்த வீடுகளில்தான் படங்களை திரையிடவேண்டும்.

எங்களால் நல்ல காத்திரமான படங்களினை உருவாக்க முடிவதில்லையே,(தொழில்நுட்ப பக்கத்தினை விட்டுவிடுவோம்) ஒரு தாய் கடன் பெற்று படிக்கவைத்த தன்மகன் முதல் நாள் வேலையில் விபத்தாகி இறந்துவிட்டான் என்பதை அறியும்போது அந்ததாய்க்கு ஏற்படும் உணர்வு (படமென்று தெரிந்தும்) தொலைக்காட்சி ஊடாக வந்து எமக்கு ஏதோ செய்யுமே, அப்படி ஏன் எங்கள் திரைப்படங்கள் எதுவும் செய்வதில்லை?.

ஒரு மனிதனின் வளர்ச்சிக்கு அவனின் அறிவும் அனுபவமுமே காரணம் எங்களுக்குத்தான் இரண்டும் இல்லையே (சினிமாத்துறையைப் பொறுத்தவரையில்)

அவ்வாறாயின் ஏன் நாங்கள் இது குறித்தான பாடநெறிகளை கற்ககூடாது? எத்தனையோ கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் இந்தத்துறை சார்பாக பாடநெறிகளினை வைத்திருக்கிற போதும் நாங்கள் ஏன் இப்பாடநெறிகளினை கற்ககூடாது?

இந்தத்துறை எங்களுக்கு பரிட்சயமானால், இங்கிருந்து எத்தனையோ ஆயிரம் கொடுத்து இந்தியாவில் திரைப்படங்கள் வாங்கும் வினியோகஸ்தர்கள் எங்களை நம்பி உங்கள் முயற்சிக்கு பணம் போடத் தயங்கமாட்டார்கள், எங்கள் திரைப்படங்கள் திறம்பட வருமாயின் அவற்றினை பல நாடுகளில் திரையிடலாம் (கோவில்களில், பொது இடங்களில் அல்ல).

இதனை விட்டுவிட்டு இவங்கள் அவனுகளுக்குத்தான் உதவி செய்வானுகள், பேசாமல் அதைப் படிக்கிற நேரத்துக்கு மூண்டு படம் எடுத்திட்டு போய்விடலாம் என்று சொன்னால் இந்தத் தலைமுறை மட்டுமல்ல இனிவரும் தலைமுறையும் கோவிலிற்குள்தான் படம் பார்க்கும் என்பதில் ஐயமில்லை.

## விளம்பரம் தந்த, தருகின்ற, தரப்போகின்ற விளம்பரதாரர்கள்

படிக்க வேண்டிய அதி முக்கிய பகுதி.

அன்பான விளம்பரதாரர்களே..!

அன்பான என உங்களை அழைக்கலாம்... அதற்கு ஆழமான காரணம் உண்டு. வணக்கம்...

நீங்கள்தான் உலக ஊடகங்களின் (சில ஊதுகுழல் ஊடகங்கள் தவிர.) ஊட்டச்சத்து. இதை மறுத்துரைக்கும் ஆன்மபலம் எந்த உயிர்ப்புள்ள ஊடகத்திற்கும் இல்லை. லண்டன் தமிழ் ஊடகங்களின் வேர்களுக்கு பால், நீர் என பல்வேறு பதார்த்தங்களையும் பரிமாறுகின்றவர்கள் நீங்கள்தான்.

நீங்கள் கை விரித்து விட்டால் வாசகர்கள் இதழ் பிரிக்கமுடியாது. வானொலியாளர்கள் வெறும் பாடல்களுடனே காலந்தள்ள வேண்டியிருக்கும். வாரிவழங்கினாலும் வளருமோ தெரியவில்லை தொலைக்காட்சிகள்.

இந்நிலையில், எந்த ஊடகத்தில், எந்த அளவில், எவ்வளவு காலத்திற்கு விளம்பரம் வழங்கலாம் என்பதை, ஊடகம் மீதான உங்கள் கணிப்பே தீர்மானிக்கின்றது. அது உங்களுக்கான முழுமையான உரிமை.

நீங்கள் தேடிப்போகின்ற வகையிலும் சில ஊடகங்கள் இருக்கின்றன. உங்களைத் தேடிவந்து, நிர்ப்பந்திக்கின்ற நிலையிலும் சில ஊடகங்கள் இருக்கின்றன. கொடுக்கப்படும் விளம்பரம் உங்கள் வியாபாரத்தைப் பெருக்கும் என்ற நம்பிக்கையைக் கடந்தும், முகம் முறிக்க முடியாதும் விளம்பரங்கள் வழங்குகிறீர்கள்.

பொதுவாக உங்கள் விளம்பரங்கள் நாள் தோறும் 12 மணித்தியாலங்களுக்கு மேலான கடின உழைப்புக்குப் பிறகே வருமானத்தை சாதிக்கின்றன. அதிலும் ஏகப்பட்ட ஏற்றங்கள் இறக்கங்கள்.

இந்த நிலையில் விளம்பரங்கள் வியாபாரத்தைப் பெருமளவில் தூக்கி விடும் என்ற நம்பிக்கை உங்களில் பலருக்கு இல்லை). உங்கள் நிரந்தர வாடிக்கையாளர்களே உங்கள் வணிகத்தைப் பேணுகின்றார்கள். என்றாலும் புதிய நிறுவனங்கள் தம் அறிமுகத்துக்காகவேனும் ஊடகங்களை நாடத்தான் வேண்டி இருக்கிறது.

இருப்பினும் உங்களை நம்பியே ஊடகங்கள் வாழுகின்றன; வாழ வைக்கிறீர்கள். லண்டன் தமிழ்ப் பத்திரிகை வரலாற்றின் தொடக்கம் உங்களால் வாழ்வுபெற்றது என்பது வரப்போகும் வரலாற்றுக் குறிப்பு.

மாற்றுக் கருத்துக்கள் ஏதும் இன்றி ஒருபேப்பரும் உங்கள் வருகைக்குத் தான் வாசல் பார்க்கிறது. ஒருபேப்பரில் இடம் பெறும் உங்கள் விளம்பரங்களால் உங்கள் வணிகத்தைப் பெருக்க முடியும் என்ற உறுதி மொழி ஏதும் எங்களால் வழங்க முடியாது. ஆனாலும், ஒருபேப்பரின் குணாதிசயங்கள் வாசகர்களை ஒருபேப்பரினை சேகரிக்கச் செய்கின்றது.

ஒரு காலத்தில், ஒரு நாளேனும் பயன் விளையாய்ப்புகள் உண்டு. எனவே ஒருபேப்பரின் இதழ்கள் உங்களால் நேசிக்கத்தக்கதாய் இருந்தால்; ஒருபேப்பருக்குள் ஒரு பேப்பராய் இருங்கள்.

ஒருபேப்பர் இதழுக்குள் கால் பக்க விளம்பரம் உங்களுக்கு சிறு பொருட்டு. எழுதத் துடிக்கும் எம் இளைய விரல்களுக்கு அதுவே இரத்த ஓட்டம். வாரி வழங்கும் கையால் காகம் விரட்டும் போது விழும் பருக்கை எமக்குப் போதுமானது. அன்பு கலந்து அழையுங்கள்.

அது அரவணைப்பு.

யாதுமாகி

நிற்போம்

Book Review:

# Rajiv Gandhi Assassination:

## Ex-Police Chief D.R.Kaarthikeyan's Version of Truth

by: Sachi Sri Kantha

*(Continued from the previous issue)*

Kaarthikeyan's professional zeal in interrogating Sri Lankan Tamils and low brow Tamils of India borders on pathological excess. For balance, I wonder whether he showed the same zeal in 'interrogating' Congress Party bigwigs who were in Rajiv's vicinity on that fateful night of May 21, 1991? A select list include, Maragatham Chandrasekhar and her daughter Latha Priyakumar, K.Moopanar, Vaazhapadi Ramamurthy and Jayanthi Natarajan. **Understandably, Kaarthikeyan is mum on his 'interrogations' of these bigwigs. Why?** With such a cluster of bigwigs attending that function, it stretches credibility that only 16 photographs - *ten photographs of amateur Haribabu and 'six others taken by a photographer who had accompanied Shankar Ganesh's music troupe were the only ones to be taken before the assassination'* [p.26].

The author also informs about the peculiar predicaments to the two videos taken on the event site. "The two videos taken at the Sriperumbudur meeting site – one arranged by the local organisers and the other by the TNCC(I) – had failed to capture the explosion. Whether this was due to design or accident or tampering (as was widely alleged), or whether it was simply a coincidence for which there could be a rational explanation, had to be examined in depth." [p.121] Accident is plausible, but chances of both (not one) videocameras - manned by two different cameramen - failing to capture the blast seem a bit unbelievable, isn't it? Few sentences later, Kaarthikeyan resolves the puzzle as follows: "The video film of the local organisers had developed a lot of disturbance towards the end, because of poor quality of film. We were convinced that no one had tampered with it, especially after the videos were examined by technical experts in Chennai. But to set aside all doubts, the video cassette was sent to the FBI laboratory and their tests confirmed our own findings that there was no tampering." Well, what happened to the video of TNCC(I)? Kaarthikeyan is silent on the fate of videocassette arranged by the TNCC(I).

**Finding 5: Kaarthikeyan is a keeper of many Indian 'national security' secrets and is not a ham to reveal them to the public in his own words.**

It appears to me that Kaarthikeyan is scrupulously aversive to even mention the Indian spy agency. The only reference in the book to RAW, is also not directly from the author; it appears as a quotation from a vapid source - none other than The Broken Palmyra book of Rajan Hoole and colleagues. For reasons of convenience, Kaarthikeyan had meekily copied the following sentence: *"All of them [referring to the Eelam Tamil militant groups] received succor from India and were monitored by the Indian intelligence organisation RAW (Research and Analysis Wing.)."* Isn't it clever? only monitored by the RAW? This is akin to prostitutes claiming that they were in bed with their customers only to check whether their contacts are shaved or not. Kaarthikeyan is either joking or needs his brain scanned for amnesia causing lesions!

Kaarthikeyan also provides the statistic that 288 prosecution witnesses (PWs) gave evidence, in the assassination trial which commenced on 19 January 1994. Of the 288 witnesses, he provides the names of only a couple. The first PW was Madhuram, the police inspector in charge of the Sriperumbudur police station. Then, excluding the name of K.Ragothaman [chief investigating officer of SIT], Kaarthikeyan is mum on the identity of the 286 individuals who served as PWs. Rather he provides a blanket sentence, "We produced 287 more witnesses – there was a governor of state, an ambassador of India, a senior army officer, political leaders, police scientists, senior journalists, doctors, police officers and large number of commoners from Sri Lanka and India – who tendered evidence in the Designated Court." *What was his motive in hiding the identities of these PWs?* After intensively reading the Supreme Court verdicts of Wadhwa, Thomas and Qadri, **I had compiled the names of 144 PWs who receive citation in the judgements.** [*vide*, Pirabhakaran Phenomenon series, part 26, in the sangam website] Here is a sample; music director Shankar Ganesh was PW



*Signing of the Indo-Sri Lanka agreement*

***It appears to me that Kaarthikeyan is scrupulously aversive to even mention the Indian spy agency.***

18; Maragatham Chandrasekhar was PW 29; L.D.N.J.Wijesinghe, Senior Superintendent of Police, Sri Lanka & Interpreter of LTTE wireless transmissions was PW 67; Dr.Cecelia Cyril (who according to Kaarthikeyan conducted the postmortem on Rajiv Gandhi's corpse) was PW 121; Dr.Amrit Patnaik, who conducted the postmortem on the remains of assassin Dhanu, was PW 147; P.G.Abeykoon Bandara, Deputy Controller, Dept.of Immigrations and Emigration, Sri Lanka, was PW 185; Brigadier Vivek Sapatnekar, IPKF Operations, Sri Lanka was PW 186; Kasi Anandhan, member of LTTE Central Committee was PW242; Vazhapadi K.Ramamurthi, President of Tamil Nadu Congress Committee & later Thamilzhaga Rajiv Congress was PW 258; Dr.P.Chandrasekaran, Director of Tamil Nadu Forensic Science Laboratory, was PW 280; and Chief Investigating Officer of SIT, K.Raghothaman was PW 288.

**Finding 6: Kaarthikeyan is an afficinado of deception.**

Maybe to hide his disappointment on the criticism delivered by the three Supreme Court Justices, Kaarthikeyan had tactically blacked out the details. I cite a few specific stinging comments made by Justice Wadhwa [who delivered the lengthiest judgement] in his verdict on the dubious validity of wireless-radio intercepts, on which the prosecution built up its case against LTTE leader Pirabhakaran and LTTE's Intelligence Chief Pottu Amman. To quote Justice Wadhwa,

(1) "Suspicion however strong does not take the place of proof. Wireless messages are transmitted and received in coded language. It is nobody's case that Robert Payas (Accused 9) knew the nature or the contents of the messages. It must not be lost sight of that LTTE had various activities and all LTTE men were not necessarily involved in achieving the object of conspiracy. Evidence shows that other LTTE activists who had come to India were also engaged in arranging houses for various purposes like housing the injured LTTE cadre, storing of medicines, etc."

(2) "It appears to us that prosecution is looking at every circumstance with the proverbial jaundiced eye."

(3) "Prosecution also does not tell us the contents of the code sheets and how these were used by Murugan (Accused 3). Charge under Section 6(1A) of Indian Wireless and Telegraphy Act, must, therefore, fail."

(4) "When the prosecution during the course of the trial, which lasted over a number of years, had taken the stand that killing of Rajiv Gandhi was a terrorist act, it cannot now turn about and say that killing itself was not a terrorist act but was committed to achieve the object of conspiracy which was to overawe the Government. As a matter of fact in the statement of Kasi Anandhan (PW-242), who was a member of the Central Committee of LTTE, it has come on record that he met Rajiv Gandhi in March 1991 when Rajiv Gandhi supported the stand of LTTE and had admitted that it was his mistake in sending IPKF to Sri Lanka and wanted LTTE to go ahead with its agitation. That being the evidence brought on record by the prosecution there is no question of it now contending that there was conspiracy to overawe the Government. Its stand throughout has been that it was the personal motive of Prabhakaran and others to commit terrorist act by killing Rajiv Gandhi. Under Section 3(1) of TADA overawing the Government cannot be the consequence but it has to be the primary object. There is nothing on record to show that the intention to kill Rajiv Gandhi was to overawe the Government..."

**Finding 7: Kaarthikeyan is a self-serving discriminator, and even discriminates Rajiv Gandhi [when it comes to death].**

Kaarthikeyan, repeats in page 189 of the text what he had presented in his preface about his belief in destiny. *"I have to discharge my duty. I never fear for my life. I believe in destiny. Till my time comes, nobody can kill me and when the time comes, nobody can save me. So, why bother about something which is certainly going to happen one day. By worrying about it you will have constant fear of death."*

Great. What Kaarthikeyan professes is a credo of life, with a religious frame of reference; and he is entitled to it. Millions

*Continued next page*


**Markandan & Sharma Solicitors**

SOLICITORS AND ADMINISTRATORS FOR OATHS

Mr. M. Markandan Previous owner of Markandan & Co Solicitors situated at 720 Romford Road, Manor Park, London E12 6BT and Mrs Lata Sharma of Sharma & Co Solicitors situated at 21 Boundary Road, Plaistow E12 9PS have opened a new Practice to deal with the following areas of Low on private basis:

புதிய அமைப்பில் இன்னும் மேலான சேவை!

Please Contact Mr. Markandan on 07956386573, Mrs. Sharma on 07939829644, Mr. Jasokumar on 07961996482.

Bow Business Centre, 153-159 Bow Road, London E3 2SE

Tel: 020 8981 5330 Fax: 020 8981 5350

Civil Litigations
Immigration - all Countries
Conveyancing - Residential and Commercial
Liquor Licenses
Traffic Offences
Magistrates Court Matters
Police Station Advice
Wills and Probate
Work Permits
Matrimonial matters
Landlords and Tenants matters
Sponsorship documents
Power of Attorney- Documents

*Continued from previous page*

of Hindus have lived their lives for thousands of years on this noble credo. According to this credo implied and/or expressed, the major controls are divine and not subject to human effort, planning and/or volition. If this be the case, why the untimely death of Rajiv Gandhi should be treated differently? What is good for Kaarthikeyan should be fine for Rajiv Gandhi as well, and he should not discriminate the former prime minister of India. Even Rajiv had premonitions of a violent death for him before he ascended to prime-ministership in 1984, and his wife Sonia has recorded it in her coffee table book, *Rajiv* (1992, p.9). Couldn't it be taken that Rajiv reaped what he politically sowed – not only in Sri Lanka, but also in Punjab, Kashmir and other troubled states, including Tamil Nadu? Remember, few months before Rajiv's death, the then Prime Minister Chandrasekhar – acting on the indulgence of Congress Party which precariously sustained his prime-minister rank – sneakily imposed Presidential rule in Tamil Nadu, by sacking the DMK government.

For sure, Kaarthikeyan would be familiar with the old adage, *Thinai Vithaithavan Thinai Arupaan; Vinai Vithaithavan Vinai Arupaan* [One who sows millet, reaps millet; one who sows misery, reaps misery]. The same message appears in other Tamil poetic works as well. An example is Saint Pattinattar's admonition *'Than Vinai Thannai Chudum; Ootappam Veedai Chudum'* [literal translation: One will be burnt by his fate; and the cursed *Appam* will burn the House.]. By trying to embellish Rajiv's premature death at the hand of a woman assassin whom he identifies as Tharu – an LTTE cadre - with legal gibberish and national security concerns, Kaarthikeyan is not being true to his own credo of life. In acknowledging the concern of his 84 year old mother, who wanted her son [Kaarthikeyan] " to give up this arduous and risky assignment" of solving the mystery of Rajiv's assassination, Kaarthikeyan has also revealed tangentially that his aged mother had comprehended the Hindu concepts of destiny and death, better than him.

Portable Air Conditioning for Sale

Registred & Approved
TOSHIBA,
MITSUBISHI,
3D HEAVY DUTY and
HITACHI Installer

Specialists in Industrial & Commercial Inspection, Testing and Certification
Fully Qualified Engineers

237A, Edgware Road,
Collindale, London
020 8200 8962

Mobile: 077 9914 2759, Fax: 020 8200 8918


REGISTERED MEMBER ECA
UKAS QUALITY MANAGEMENT


DREAM ART CREATIONS
ரட்னசிங்கம்
அர்விந்த்
ullam
kavarndhavale
உள்ளம்
கவர்ந்தவளே
Love Attack
K.M.S.சகாயராஜா
ஜெயச்சந்திரன்
அகிலன்



FLIGHTS R US
WORLD WIDE SERVICES
Holiday packages
Travel Insurance
City Breaks
Car Hire
Hotel Booking
Ferry Cruises
Visa Service
எதிர்வரும் தைப்பொங்கல் திருநாளில் யார் அந்த அதிஸ்டசாலி!
இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்...
ஆகஸ்ட 1ம்திகதியிலிருந்து டிசம்பர் 31ம்திகதி வரையிலான காலப் பகுதியில்
எம்மிடம் விமான பயணச்சீட்டு வாங்கும் இரு வாடிக்கை ஆளர்கள் தை பொங்கல் அன்று
நடைபெறும் குலுக்கல் முறையில் தெரிவு செய்யபடுவர்.
முதலாவது பரிசு – கொழும்பு சென்றுவர இலவச பிரயாண சீட்டு (இந்த சலுகை மார்ச் மாதம் 31ம் திகதிவரை மட்டுமே செல்லுபடியாகும்)
இரண்டாவது பரிசு – இரு நூறு பவுண்கள் பெறுமதியான JK MITHUN Jewellery
Special Fare To
Colombo
Madras
Singapore
Canada
Europe
கொழும்பு சென்றுவர
from £365
சென்னை சென்றுவர
from £385
கனடா சென்றுவர
from £265
Flights Rus (UK) LTD
020 8902 0000
Fax: 020 8782 2285
15 Ealing Road, Wembley
Email: sales@flightsrus.co.uk | Web: www.flightsrus.co.uk


கண்மணி ஜுவலரி
என்றும் உங்கள் வாழ் நாட்கள் ஞாபகத்தில்
020 8672 8744
கண்மணி ஜுவலரி
Southall அவர்களின் கிளை
33 Uppter Tooting Road
Tooting SQ17 7TR
விரைவில் திறக்கப்படவுள்ளது


அனைத்து மங்களகரமான நிகழ்வுகளிற்கும்
சிகை அலங்காரம்
முக அலங்காரம்
ஆடை அலங்காரம்
போன்ற அனைத்தையும் உங்கள் எண்ணம்போல்
நவீனமான முறையில் செய்துகொள்வதற்கு அழையுங்கள்
PRABAS VIDEO
Thusi Bridal make up & cake decoration
156-158 Forest Road,
Walthamstow
E17 6JQ
020 8509 3322


british tamil
www.britishtamil.com


Main agent for Qatar Airways
IATA
LinkAIR
Travels Limited
QATAR AIRWAYS القطرية
COLOMBO RETURN
£360 + tax
From 14th July to 30th August
Valid 1 month - Outbound Wed only
Please ring
020 8665 0206
www.linkair.co.uk
Linkair Travels Ltd, 361 London Road, Croydon CR0 3PB
TERMS & CONDITIONS APPLY


Cinnamon Gardens
Sri Lankan & Indian Cuisine
திருமணம், பிறந்த நாள், மற்றும் அனைத்து விஷேட வைபவங்களுக்கும்
தரமான 120 இருக்கைகள் கொண்ட உணவகம்.
அனைவரும் வியக்கும் வகையில்
நவீன முறையில் அமைக்கப்பட்ட ஒரே தமிழர் உணவகம்.
DINE IN
TAKE OUT
CATERING
42-44 Ealing Road, Wembley,
Middx, HA0 4TL
LIVE MUSIC (Friday Eve.)
020 8902 0660
Mob: 07956 832 633
Open Hours : 11.00am to 11.30pm

## Readers' replies to Kumaran Jeyakody

*More letters will be published in future issues*




# Hitler too wanted assimilation

Mario Francispragasam
Canada

*"We should get rid of unscientific beliefs and religious practices, all this cultural nonsense, temples and political activities. We should inter-marry into other races and simply assimilate and become an organic part of this great nation"*

The above is the conclusion of an article published in the Teen's Paper a number of weeks ago. The author supports the assimilation of all ethnic minorities into "English" culture in England. This theory applied on a global context seems (read blatantly) suggests a homogenization of world identity into one super-nation. This homogenization of cultures has been a very popular idea in the philosophies of many prominent and powerful individuals. Like the author, the foremost proponent of this "vision" was a European male. This individual was also determined that an ethnic group other than his own should assimilate all others, especially in "his" country: Germany. You may recall this individual's name: Adolf Hitler. Unfortunately for Hitler, (and Mr. Jeyakody) both the uncivilized and the civilized, the ugly and the pretty and the intelligent as well as the stupid people's of the world thwarted his aim's and rejected his philosophy.



*Hitler: Mr. Jeyakody's role model?*

The question now is: Why did the world's people take offence to Hitler's ideas, and it seems, Mr. Jeyakody's ideas as well. Surely there must be something erroneous about this idea of homogeneity, but what is it?

Let's start with "Getting rid of unscientific beliefs and religious practices". This is usually uttered by those in a capitalistic system as an excuse to put down the value of the economic systems of other nations in order to conquer a people. It is impossible for any human entity to validate a scientific claim that arises during its existence. In essence, what one holds to be a great scientific truth may be termed erroneous at a later date. This notion of uncertainty is the cornerstone of science. Thus, Mr. Jeyakody has suggested impossibility and has wasted our time.

On the other hand, eliminating religious practices seems to be a great way of increasing the efficiency of a people. This is also incorrect. The religious practices of Protestantism, Hinduism and Catholicism have given rise to capitalism, mathematics and law. To get "rid" of such practices may cause humanity to lose out on other advancements. Furthermore, religious practices of "backwards" peoples are openly embraced and practiced by westerners in hopes of finding "inner peace". Practices of these so called "uncivilized" eastern cultures, such as meditation and yoga are now crucial to the finding of contentment in many westerners lives. It is clear that religious practices enhance life in at least one way, and have been integral to human development in the past and in no way deserve to be gotten rid of.

Culture is not nonsense. It is actually "sense" in the most basic understanding of it's meaning. Culture is the set of tools that a people create to make sense of their surroundings and to survive. I'm sure that it is easy to see that it is impossible to get rid of all cultures, for when you do, there is always at least one remaining. Culture is something one is taught from the second one is born. It is very difficult to discard it upon immigration or upon being assimilated. At attempt to do so will result in the collapse of an entire people. This is seen in the situation of Aboriginal people in Canada, whose population has been devastated by forced assimilation early in history. Various cultures living in the same nation actually enhance the quality of life in a nation. In Canada, a multicultural state, the various festivals and happenings of other cultures, whether it be Greek, Caribbean, Sri Lankan or Irish, are celebrated and enjoyed by all. This may not be clear when one lives in a nation such as England where racism is a stark reality. Culture is an asset that has, and will continue, to serve humanity. It is not a whim based on one experience (like most of Mr. Jeyakody's arguments); it is an exquisite tapestry of many experiences and ways of life.

England, as a country is extremely stratified socially. To move up the social ladder in England (in comparison to Canada) doesn't happen in one life time in most cases (This is supported by sociological studies). This may be the reason, Mr. Jeyakody suggested that politics should be got rid of. Maybe Mr. Jeyakody would appreciate a world where a monarch controlled the state and any form of protest (a political activity) is outlawed. It seems from his comment that Mr. Jeyakody would embrace a world in which citizens pay homage to rich aristocrats, but I doubt many others share his opinion.

Marriage, whether it's between those of the same race or those of different ethnic origin, is something that should be celebrated. It seems, at least in the context and the wording of Mr. Jeyakody's last statement,

***Practices of these so called "uncivilized" eastern cultures, such as meditation and yoga are now crucial to the finding of contentment in many westerners' lives***

that he has a problem with immigrants marrying those of their own race. It seems Mr. Jeyakody made his statement concerning intermarriage in response to some general opposition among a part of the Tamil community in his area to his sister's marriage to the "Welsh bloke". I wish Ms. Jeyakody the best of luck and my congratulations, but I don't see how her brother's single experience of opposition to intermarriage should force him to make such a hasty generalization. Expanding on this point, it seems that Mr. Jeyakody's argument is based mainly on exclusively personal experiences. He has failed to see that there are not many situations other than his own, nor has he managed to research them. Mr. Jeyakody can be forgiven for this error because bias is a force that even the most "educated fool" succumbs to.

There are various advantages to maintaining one's cultural identity as there are certain disadvantages. The disadvantages include racism and confusion and are definite forces in any immigrant's life. The overwhelming advantages include a definite social solidarity, less bias (as you are privileged to sample various points of views) and a much more exciting life. In the end, I hope Mr. Jeyakody's comments were a desperate cry for attention, for if it was anything more genuine I'd be frightened as should the rest of the world.

# An English Gentleman with a Tamil name?

Narmatha Sri Murugadas

Kumaran, I don't know whether I'm more disappointed or disgusted that you were accidentally born in to the Tamil race. I hope you never claim to be a Tamilian and continue on your path to become a true "English gentleman", for I am sure I speak for the majority of the "small and weak ethnic group" when I say you are an absolute disgrace to all the Tamils who have lost their lives so you could be born in this "great nation".

In case you don't know what I mean when I say that Tamils have actually lost their lives so you could be born an English man, I mean the thousands of Tamils who gave up their lives so our parents could migrate/seek asylum in the western world. For if it were not for their selfless sacrifice, thousands of us would not be alive today, we owe them our lives. In case you weren't aware, there is actually a civil war going on back in **MY** country. Regardless of whether the war was in full swing when your parents took up residence here or not, Tamils were still being mistreated and were living in fear. True say the war probably didn't get into national scale until the 80's, but we were still suffering from when we got independence from you British.

You say that Tamils only "educate themselves in order to make money and to uplift themselves out of their palm huts of Vadamaratchi or where ever they come from", I don't mean to get personal, but is that what your parents did? After all they are both professionals are they not?

Professional – 'engaged in specified activity as a paid occupation', well, that's the dictionary definition of the word you so proudly used to describe your parents. So what if you educate yourself or your children in order to make money, it's still a valid reason to learn. Is it not better than living on the dole as most of the population of this so great nation are doing?

I have had the privilege of being born on Sri Lankan soil 22 years ago and went back to Colombo and Jaffna after 16 years of living in this country. I did not find any of the people to be "backward", "interfering" or "uncivilized idiots", I found them to be some of the most genuine and selfless people I have met.

I learn bharatha natyam, I have been since I was six and was living in Jaffna. I have continued learning after coming here, not because my parents force me to but because I want to. And it's not so I have a better chance of getting a university place, it's because of my love for the art. Not everybody is as superficial as some.

I'm ending by wishing you all the best for your future in Cambridge and as an English gentleman. I hope that some day, when you are a little older you realise what a fool you are making yourself out to be in these articles you write in this Tamil paper.

***Good luck my boy.***

# The Olympics: Everything you need to know



The ancient Olympics were rather different from the modern Games. There were fewer events, and only free men who spoke Greek could compete, instead of athletes from any country. Also, the games were always held at Olympia instead of moving around to different sites every time.

Like our Olympics, though, winning athletes were heroes who put their home towns on the map. One young Athenian nobleman defended his political reputation by mentioning how he entered seven chariots in the Olympic chariot-race. This high number of entries made both the aristocrat and Athens look very wealthy and powerful.

### Athletes' Stories

Like their modern counterparts, ancient athletes had a way of capturing the public's imagination. Several ancient authors such as Pindar, Pausanias, Strabo, and Dio Chrysostom record the noteworthy exploits of some of the best-known Olympic victors of ancient times.

### The Context of the Games and the Olympic Spirit

Today, the Olympic Games are the world's largest pageant of athletic skill and competitive spirit. They are also displays of nationalism, commerce and politics. These two opposing elements of the Olympics are not a modern invention. The conflict between the Olympic movement's high ideals and the commercialism or political acts which accompany the Games has been noted since ancient times.

### When did the ancient games begin and when did they end?

Legends obscure the origins of the games, so placing any certain date on the start of the contest is impossible. Even our earliest



sources hold the festival in the highest regard, suggesting the games were quite ancient.

### Were there other contests like the Olympics?

There were 3 other major games which were held on 2- or 4-year cycles: the Isthmean Games at Corinth, the Pythian Games at Delphi, and the Nemean Games at Nemea. Because it started 200 years before the other competitions, the Olympics remained the most famous athletic contest in the ancient Greek world.

Many athletes competed at several athletic festivals. Inscriptions on victor's statues at Olympia often describe victories in 2, 3, or even all 4 major athletic festivals.

## Messy Sport

Q. Why is Basketball such a messy sport?

A. Because you dribble on the floor!

Q. How do baseball players stay cool?

A. Sit next to their fans.

Q. What dog keeps the best time?

A. A watch dog.

Never try to be someone you're not

## Dear Teens,

Now you have a page for yourselves why not send in your contribution of what you would like to see in the next issue. We would like you to send in your contributions to us, as well as your hobbies, interests and where you like going during your holidays.

**Thank You!**

Teens Paper
45b Crusoe Road
Mitcham, CR4 3LJ.

## The Moment you've been waiting for



Getting stressed because you're waiting for your exam results? Here are a few tips on how to stay calm:

1. Tell yourself that you tried your best in the exams;
2. Enjoy yourself by doing what you like doing;
3. Treat yourself to things

The list can go on and on and on, but the main thing is: Stay Positive!

We are sure that you have done well in your exams.

Our best wishes for Tamil teenagers receiving exam results soon.

*Oru Paper teens team.*

## Meeting new people in school

You are most probably going back to school to start a new school year. Some of you might be going into upper school to start your GCSE courses. Sixth form to start you're a-Level courses, maybe continue with school or maybe even move to another school.

In every prospect you will get to meet new people like teachers and new pupils.

Don't get scared of that fact, as you will be meeting new people all through your life wherever you go. So just get on with life. Who knows you might even get a best friend from the new people?

# Big Ben: And the Westminster clock tower

Sharon Arasaratnam



In 1834 the old Houses of Parliament were completely destroyed by fire, a spectacle watched by thousands of Londoners.

The following year a Commission was set up to organize a competition for the design of a new building. It was to be Gothic or Elizabethan in style, and from the 97 drawings submitted, the one selected included a clock tower.

*This clock tower was destined to become one of the world's most recognized and best loved landmarks.*

## A competition

The winning design was by Charles Barry, a well known architect of the day. The project was beset with administrative problems and it was several years before the new building and its clock tower were completed.

A second competition was held, limited to only a few contenders, to decide who should design and build the 'Great Clock of Westminster'. The high standards demanded led to much controversy, and eventually the clock was designed by an amateur, Edmund Beckett Denison. It was to be constructed by E. J. Dent, a highly respected clockmaker, but he died before the clock was finished and it was completed by his son in 1854.

## Big Ben

The first great bell was cast in Stockton-on-Tees in 1856 and transported to London by train and sea. In October 1857 a crack appeared, and the bell had to broken up and recast, this time in Whitechapel in the East End of London. But in September it, too, cracked. The weight was reduced, the bell was turned so that the hammer struck it on a different spot, and a small square was cut out of the bell to prevent the crack spreading.

It is 9ft (2.7m) in diameter, 7 1/2 ft (2.2m) high and weighs 13 1/2tons (13,720kg).

## The Great Clock

The balance of the clock is extremely fine. There is a small shelf on the pendulum rod on which sit a number of weights, including some old pennies. The addition of one penny causes the clock to gain two-fifths of a second in 24 hours. The clock is wound and checked for accuracy three times a week.

The Great Clock of Westminster began its life as London's official timekeeper on 31 May 1859.

## The clock Faces

Each of the four clocks faces is 23ft (7m) in diameter and made up of 312 separate pieces of glass. The hour hands are 9ft (2.7m) long, made of gunmetal, and weigh about 6cwt (300kg) each. The minute hands are 14ft (4.2m) long, made of copper sheet, and weigh around 2ctw (100kg) each. Notice the Roman number IV has been used instead of the usual IIII preferred by horologists. Beneath each face, in Gothic lettering, there is an inscription in Latin- 'O Lord, make safe our Queen Victoria the First'.

## The Future

With the invention of newer and more advanced clocks, can the Westminster Clock retain its place as –probably- the most widely known timekeeper in the world? Only time itself will tell, but Big Ben and the Westminster Clock Tower will undoubtedly continue to be loved and cherished by generations to come.

## Big Ben special Quiz fire

1. How heavy is Big Ben?
2. How high is Big Ben?
3. How high is the Westminster Clock Tower?
4. Where was the first great bell cast?
5. When was the first great bell cast?

Answers:
1. 13 ½ tons (13,720kg)
2. 7 1/2ft (2.2m)
3. 314ft (95.7m)
4. Stockton-On-Tees
5. 1856

## மாலைதீவில் அவசரகால நிலை பிரகடனம்



கடந்த 25 வருடகாலமாக அதிபர் அப்துல் கையுமின் ஆட்சியில் இருந்துவரும் மாலைதீவில் கடந்த வாரம் அவசரகால நிலை பிரகடனப்படுத்தபட்டுள்ளது.

மாலைதீவில் வேறு அரசியல் கட்சிகளை அமைப்பது தடைசெய்யப்பட்டுள்ள நிலையில், சனநாயக உரிமைகளை கோரியும், அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறும் கடந்த வெள்ளியன்று (ஓகஸ்ட் 13) சுமார் 5,000 மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவ் ஆர்ப்?பாட்டங்களால் ஏற்பட்ட குழப்பங்களில் நான்கு பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்தனர். இவ் வன்முறைகளில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 50 பேர் கைது செய்யப்பட்டனர்.


வன்முறைகள் தொடருவதை தடுக்கவே அவசரகால நிலை பிரகடனப்படுத்தப் பட்டதாகவும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்ததும் சட்டம் அகற்றப்படுமென அரசின் பேச்சாளர் டொக்ரர் அப்துல் சாகிப் தெரிவித்துள்ளார். அவசரகால நிலையின்போது, அரசியலமைப்பு சட்டத்துக்கு புறம்பான அளவற்ற அதிகாரங்களை அரசு பெற்றுக்கொள்ளும். இதனால் ஏற்கனவே சனநாயக முறைகள் பாதிக்கப்பட்டுள்ள மாலை தீவில், அரசு மனிதவுரிமை மீறல்களில் ஈடுபடுவது அதிகரிக்கும் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாசாய் இன மக்களின் நிலவுரிமை போராட்டம்

கென்யாவின் தலைநகர் நைரோபிக்கு அருகில் 100 வருடங்களுக்கு முன்னர் குத்தகை அடிப்படையில் ஆங்கிலேயருக்கு கொடுக்கப்பட்ட தமது நிலங்களை மீளக் கையளிக்குமாறு மாசாய் இன மக்கள் விடுத்த கோரிக்கையை கென்யா அரசு நிராகரித்துள்ளது.

மாசாய் இன மக்கள் கென்யாவின் ஆதிக் குடிகளாவர். பெரும்பாலும் நைரோபிக்கு அருகில் உள்ள உலர் நிலப்பிரதேசத்தில் மந்தைகளை பராமரித்து தமது வாழ்க்கையை நடாத்தும் இம்மக்கள் குழாம் இன்னமும் தமது பாரம்பரிய நடைமுறைகளுக்கு ஏற்ப வாழ்ந்து வருகிறார்கள்.

கென்யா பிரித்தானியாவின் காலனித்துவ ஆட்சிக்குள் இருந்த காலத்தில், மாசாய் மக்களுக்கு சொந்தமான பல மில்லியன் ஹெக்டயர் நிலங்கள் 100 வருட குத்தகை அடிப்படையில்? பிரித்தானியாவின் பெரும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இங்கு ஆங்கிலேய விவசாயிகள் பெரும் பண்ணைகளை அமைத்துள்ளார்கள். மீதியாகவுள்ள நிலப்பரப்பில் கென்யாவின் கறுப்பின விவசாயிகள் சிறியளவி?லான பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளார்கள்.



இந்த 100 வருட ஒப்பந்தக் காலம் இம்மாதம் நிறைவுக்கு வந்துள்ளதால், ஆங்கிலேய பண்ணையாளர்களை இந் நிலங்களிலிருந்து அகற்றுமாறும், அங்கு கறுப்பின விவசாயிகளினால் பாவிக்கப்படும் நிலத்துக்கான நஸ்ட ஈட்டினை பிரித்தானியாவிடமிருந்து பெற்று தருமாறும் மாசாய் மக்களினால் கோரிக்கை விடப்பட்டிருந்தது. இக் கோரிக்கைக்கு ஆதரவு தேடுமுகமாக மாசாய் மக்களின் பிரதிநிதிகள் கடந்த மாதம் லண்டனுக்கு வந்திருந்தினர்.

இந்த ஒப்பந்தம் பிரித்தானியாவின் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் ஏற்படுத்தபட்டுள்ளதால், இதற்கான பொறுப்பை தாங்கள் ஏற்க முடியாதென கென்யா அரசு கைவிரித்துள்ளது. இருப்பினும் மாசாய் மக்களின் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என தெரியவருகிறது. இதன் ஒரு அங்கமாக, கடந்த வாரம் தலைநகர் நைரோபியில் மாசாய் மக்கள் பெரும் ஆர்பாட்டமொன்றை நடாத்தியுள்ளார்கள்

## உளவுத்துறையின் கண்காணிப்பில் அரசியல் நடவடிக்கையாளர்கள்



செப்ரெம்பரில் நடைபெறவிருக்கும் அமெரிக்க அதிபரின் குடியரசுக்கட்சியின் வருடாந்த மாநாட்டுக்கு முன்னதாக, குழப்பங்களை விழைவிக்க கூடியவர்கள் என சந்தேகிக்கப்படுவோர்மீது தீவிர கண்காணிப்பை மேற்கொண்டு வருகிறது அமெரிக்க உள்ளக உளவுத்துறை நிறுவனம் எப்பிஜ (FBI).

இந்தவகையில் அதிபர் புஷ்க்கு எதிரான தீவிர கருத்துக் கொண்டோர் மற்றும் சூழலியல் நடவடிக்கையாளர்களின் இணையத்தளங்களும் கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. அதிகாரிகள் இவர்களது வசிப்பிடங்களுக்கு சென்று விசாரணைகளை மேற்கொள்ளுவதாகவும் ஐக்கிய அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பொதுவாக இவ்வமைப்புகளும் நடவடிக்கையாளர்களும் சட்ட வரம்புக்குள் நின்று செயல் படுகின்றபோதும், மாநாட்டுக் காலத்தில் எந்த அசம்பாவிதமும் ஏற்படா வண்ணம் முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்வதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு புறம்பாக, இவ்வாறு எதிர் கருத்துக்கொண்ட உள்நாட்டு மக்கள் மீது மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தனிநபர் சுதந்திரத்தை பாதிக்கின்றது என்று மக்களுரிமைகளை பாதுகாக்கும் அமைப்புக்கள் கருத்து வெளியிட்டுள்ளன. விசாரணைக்கு வரும் உளவுத்துறை அதிகாரிகளுடன் ஒத்துழைக்க வேண்டிய அவசியமில்லை என்ற சட்டபூர்வமான உரிமையை மிகக் குறைந்த மக்களே தெரிந்து வைத்துள்ளார்கள் என நியுயோர்க் மக்களுரிமை கழகம் விசாரணைகள் பற்றி அதிருப்தி தெரிவித்துள்ளது.

TIME TRAVEL & TOURS
...Service is our Life Style

Special rates for all HOTELS & Package Holidays to
SRI LANKA, MALDIVES, DUBAI & INDIA

Call now for the fares to COLOMBO
& ALL WORLDWIDE Destinations

COLOMBO - JAFFNA
Return £40 per person

ABTA
ATOL PROTECTED 4585
IATA

TIME Travel TOURS

209-210 Tooting High Street
020 8767 0000

432 Alexandra Avenue
Rayners Lane
020 8429 8333

136 Kenton Road
Harrow
020 8907 6969

WWW.UCANFLY.CO.UK FOR OFFERS WWW.UCANFLY.CO.UK/OFFERS

# சோக்ரடீஸ்: பலிக்களம்



சோக்ரடீஸ் தோன்றியது இற்றைக்கு 2450 ஆண்டுகளுக்கு முன்பான காலம். இயேசு தோன்றாத காலம் நபிகள் பிறக்காத காலம் சமணம் புத்தம் டாயஸ் சீக்கியம் ஜைனம் போன்ற மதங்கள் தோன்றாத காலம்.

ஜெகத்தைச் சிந்தனைக் கூடமாக எண்ணிய சோக்ரடீஸை இளைஞர்களைக் கெடுக்கிறான் கிரேக்கர்கள் தொழுது வரும் கடவுளைத் தூற்றி ஒரு புதுக்கடவுளைத் தானே உருவாக்குகிறான் என்று பலவாறு கூறித்தன் குற்றச்சாட்டை மெலிடஸ் என்பவன் பின்வருமாறு நீதிமன்றத்தில் படிக்கிறான்

## குற்றச்சாட்டு

பித்தஸ்பேட்டையில் இருக்கும் மெலிடஸ் என்பவரின் மகன் மெலிடஸ் அலோபேக் பேட்டையில் வசிக்கும் காலஞ் சென்ற சோப்ரோனிஸ்கஸ் மகன் சாக்ரடீஸ் மீது பின்வருமாறு குற்றம் சாட்டுகிறேன்:

ஏதென்ஸ் நாட்டு மக்களும் அரசாங்கமும் எந்தக் கடவுளைத் தொழுகிறார்களோ அந்தக் கடவுளைத் தொழுவதில்லை. அதற்குப் பதிலாக இவன் இதற்கு முன்பில்லாத புதிய கடவுளைப் புகுத்துகிறான். வானத்தைப் பற்றியும் நிலத்தைப் பற்றியும் ஆராய்ந்து கொண்டிருக்கிறான். சந்திரனை மண் என்றும் சூரியனைக் கல் என்றும் சொல்கிறான். புதிய மதக் கோட்பாடுகளைப் புகுத்துகிறான். சோக்ரடீஸ் மிகவும் தீயவன். கடவுளால் விவரிக்கப்படாத மறை பொருளைத் துருவியறிவது இவனுக்கு எப்போதும் பொழுதுபோக்காக உள்ளது. இவன் கெட்டதை நல்லதைப் போல் நாட்ட வல்லவன், நல்லதைக் கெட்டதைப் போல் நாட்ட வல்லவன். மற்றும் இளைஞர்களைத் தன்பேச்சின் வன்மையால் கெடுத்து விடுகிறான். ஆதலின் மெலிடஸ் என்ற வாதியாகிய நான் இவனுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டுமாறு நீதிமன்றத்தை வேண்டிக்கொள்கிறேன்.

## சோக்ரடீஷின் உரை

எழில் கொழிக்கும் ஏதென்ஸ் நகர நீதிமான்களே! இந்த என்னுடைய எழுபத்திரண்டாவது வயதில் முதன் முதலாக இப்போது நான் குற்றவாளிக்கூண்டில் நிற்கிறேன். பழக்கமில்லாத காரணத்தினால் நான் ஏதாவது தவறான வார்த்தைகளைப் பயன்படுத்தி விட்டால் நீதிமன்றத்தில் இதுவரை நிற்காத ஒரு ஏழை அதுவும் பழக்கமில்லாதவன் என்ற காரணத்தினால் என்னை உங்கள் காருண்ய உள்ளத்தால் மன்னிக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என் குழந்தைப் பருவம் முதல் இந்த வயோதிகப் பருவம் வரை பார்த்தால் நான் வாழ்ந்த இந்த எழுபத்திஇரண்டு ஆண்டுகள் மிகப்பெரிய காலமாகும். ஆனால் நித்திய தத்துவத்தோடும் அழிவில்லாத காலத்தோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது காலவேகத்தில் அடித்துக்கொண்டுபோகும் அணுவுக்குள் அணு என் வாழ்நாள். என்னை வழக்குமன்றத்தில் நிறுத்திய என் எதிரிகள் யாரையும் உங்கள்முன் நிறுத்தி நான் குறுக்கு விசாரணை செய்ய விரும்பவில்லை. என்னுடைய நியாயமான எதிரிகள் அநீதியும் அறிவின்மையும் தான். இவர்களெல்லாம் அவைகளின் நிழல்கள்.

நான் கல்லையும் மண்ணையும் ஆண்டவன் என்று ஒப்புக்கொள்ள மறுக்கிறேன். நான் மட்டுமல்ல சாமாஸ் நகரத்தில்வாழ்ந்த ஜினோ என்பவர் நான் கல்லுக்கும் மண்ணுக்கும் பிறக்கவில்லை ஒரு பெண்ணுக்குத்தான் பிறந்தேன் என்று சொன்னதையே நானும் இங்கு வலியுறுத்துகிறேன். ஆண்டவனைப் பற்றியும் அவனுடைய படைப்பைப் பற்றியும் ஆராய்ச்சி செய்வது நாத்திகம் என்றால் ஆண்டவனை ஒப்புக்கொள்ள எங்கே மறுத்துவிடுவார்களோ என்று பயப்படுவது அதைவிட நாத்திகம். என்னை மன்னித்து வெளியே அனுப்பினாலும் என் தர்க்க வாதத்தை மீண்டும் என் உயிர் உள்ளவும் செய்தே தீருவேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையில் எனக்கு அறிவில்லை மற்றவர்களுக்கும் இல்லை. மற்றவர்கள் உணரவில்லை நான் என் அறிவீனத்தை உணர்ந்தேன் அவ்வளவு தான் வேற்றுமை. நான் சாவிற்கு அஞ்சவில்லை அநீதிக்குத் தான் அஞ்சுகிறேன் எனக்கும் உங்களுக்கும் பொதுவாக இருக்கும் ஆண்டவன் பேரால் நீதி கேட்கிறேன். அந்தத் தள்ளாத வயதினன் தன் வாதத்தைச் சொல்லி முடித்தார்..

## பயங்கரத் தீர்ப்பு

மரணம் மன்னிப்பு என்ற இரண்டு பெட்டிகள் வைக்கப்பட்டன. நீதிக் குழுவின் உறுப்பினர்கள் 501 பேர் தங்கள் வாக்குப்பதிவு செய்தனர். 220 பேர் சோகரடீசை மன்னித்துவிடுமாறும் 281 பேர்கள் மரணதண்டனை அளிக்க வேண்டுமென்றும் வாக்களித்தனர். ஒருபக்கம் எக்காளம் மறுபக்கம் ஏக்கம். அதிகமான வாக்குளில் உள்ள 61 வாக்குகளில் 31 வாக்குகளே சோக்ரடீசிற்கு எமனாய்ப் போனது.

உனக்கு மரணதண்டனையளிக்க வேண்டுமென்று நீதியின் பிரதிநிதிகள் தங்கள் அதிகப்படியான வாக்குகளால் அறிவித்து விட்டனர் இறுதியாக ஏதாவது சொல்ல விரும்புகிறாயா?

பொய்க்குற்றம் நிருபிக்கப்பட்டு நான் அடையப்போகும் துன்பத்தைப் பார்த்து ஆனந்தக் கூத்தாட வேண்டுமென்று நாவில் எச்சில் ஊறக் காத்திருப்பவர்களைத் துக்கத்தில் துணை சேர்க்க எனக்கு விருப்பமில்லை. நான் அறிஞனாயிருந்தாலும் இல்லாவிட்டாலும் என் இறப்புக்குப் பின் நான் ஓர் அறிஞன் என்றே அறியப்படுவேன். இது திண்ணம். மனக்கசப்புக்கும் மாளாத சூழ்ச்சிக்கும் இடையே வாழ்வதை விட மரிப்பதே மேல். என்றாவது ஒரு நாள் இந்த நீதியின் நெடும்பயணத்தை நியாய சிந்தனையுடையவர்கள் அளந்து பார்த்துவிடுவார்கள். நான் ஒரு சுத்தவீரன்.. என் உயிரையே உங்களுக்குப் பரிசளிக்கிறேன் என்று பேசி முடித்தார் சாக்ரடீஸ்

கால வெள்ளத்தாலும் கண்ணீராலும் அழிக்கமுடியாத கறை ஏதென்ஸின் மேல் பட்டுவிட்டது. சோக்ரடீஸை விஷங் கொடுத்துக் கொல்ல வேண்டும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது.

விழாக்காலம் என்பதால் 30 நாட்கள் கழித்து தண்டனை நிறைவேற்றப்படுமென்றும் அதுவரை சோக்ரடீஷின் காலைச் சங்கிலியில் பிணைத்து வைக்க வேண்டுமென்றும் நீதிமன்றும் தீர்ப்பளித்தது..

சோக்ரடீஷை எப்படியாகிலும் தப்பிக்க வைத்து விடவேண்டுமென்று 30வது நாள் அவரது நெருங்கிய நண்பர் கிரீடோ என்பவர் சிறைச்சாலைக்குள் நுழைந்து விட்டார்.

கிரீடோ: ஆற்றலின் குன்றே! தர்க்கவாத கேசரியே! கிரேக்கத்தின் ஞானக் களஞ்சியமே! இன்றே சிறைச்சாலையை விட்டு வெளியேறுங்கள். நீங்கள் மறைந்தால் மானிட வர்க்கத்தின் விலைமதிக்க முடியாத மாணிக்கமாகிய தங்களைப் பெறும் ஆற்றல் இவ்வையத்திற் இல்லை. எதிரிகளைக் கொழுக்கவிட்டு விட்டுத் தாங்கள் உயிர் விடத் துணிந்ததை நான் பெருத்த அவமானமாகக் கருதுகிறேன். கண்ணீர்விட்டுக் கதறி அழுதார் கிரீடோ. வெளிநாடு எங்காவது சென்று விடுவோம்!

சோக்ரடீஸ்: அன்புள்ள கிரீடோ.. நீ சொல்வதைப் போல் சிறையிலிருந்து தப்பினால் என்ன ஆகும் தெரியுமா? நான் ஒரு கொலை காரனைப் போல் தலை மறைவாய்த் திரிய வேண்டும் இப்படியே நிரபராதியாகத் துன்பம் அனுபவிப்பவனாக நீதியை நேசித்தவனாக நேர்மையாளன் என்ற நற்பெயரோடு அஞ்சா நெஞ்சன் என்ற கௌவரத்தோடு இறந்துவிடுகிறேன். யாரும் கவலைப்படவேண்டாம். என் உடலை புதைப்பதா எரிப்பதா? என்று குழப்பமடையவே வேண்டாம். இறந்த பிறகு உடலில் நான் ஏது? உங்கள் சோக்ரடீஸ் இறந்துவிட்டபின் உணர்வற்ற சடலம் தான். அதை எப்படிச் செய்தால் என்ன?

சிறை அதிகாரி கையில் விஷக் கோப்பையை ஏந்தியவாறு சோக்ரடீசிடம் வருகிறான்.

சிறை அதிகாரி: ஐயா அறிவுத் தெளிவுடன் இருக்கும் தங்களுக்கு விஷம் கொடுக்க வேண்டும் என்ற நினைப்பே என்னை வருத்துகிறது.

சோக்ரடீஸ்: நண்பரே இந்த விஷத்தை எப்படிச் சாப்பிட வேண்டும்?

சிறை அதிகாரி: ஐயா.. இதைச் சாப்பிட்டவுடன் நடந்தவாறு இருங்கள்? கால்கள் மரத்துப் போனதும் படுத்துக் கொள்ளுங்கள். காலிலுருந்து ஆரம்பித்து உடம்பு முழுதும் உணர்வற்றுப் போகும்.. இறுதியில் மரணம் சம்பவிக்கும்.

சோக்ரடீஸ் அருந்திய விஷம் அவர் உயிரைப் பருகிக் கொண்டது. பெருந்திரளான மக்கள் கூட்டத்தோடு சவ ஊர்வலம் நடைபெற்றது. கல்லறைக்கு அருகில் சோக்ரடீஷின் மாணாக்கன் பிளேட்டோ உரையாற்றினான்.

எனது ஏதென்ஸ் நாட்டு அருமை நண்பர்களே! அறிஞனை எரித்த கைகளோடு நிற்கிறோம். ஒரு நல்லவரை வீண்பழி சுமத்திக் கொன்றுவிட்ட குறைமதி படைத்த நாடு ஏதென்ஸ் என்ற சாபக்கேட்டை நம் தாயகம் பெற்றுவிட்டது . இனி அந்தச் சாபக்கேட்டைத் தீர்ப்பதற்கு ஒரு நல்ல வழி பிறக்கும் என்ற நம்பிக்கை என் அறிவுக்கெட்டியவரை புலப்படவில்லை.

**வாழ்க சோக்ரடீஸ்!!**

உங்கள் அனைத்து வரைகலை வேலைகளும்
நவீன முறையில் செய்து தரப்படும்
* Jasmin STUDIO
020 8640 4604

# பெண் மொழி மனித மொழியாவது எப்போது?

தீ. பாமா

இன்றையநடைமுறையில் இருக்கிற ஆணாதிக்க சமுதாயக் கட்டமைப்பில் பெண் தனக்கான இயல்புகளோடு வாழ்வது ஒரு புறம் இருக்கட்டும், தனக்கான இயல்பு இதுவென்று உணரக்கூடிய தருணங்களையாவது சந்தித்திருக்கிறாளா? சிந்திக்கவாவது அவள் செய்திருக்கிறாளா? என்ற மிகப்பெரிய கேள்வி முதலில் நமக்குள் இருக்கின்றது. இயல்புகளை உணருகின்ற தருணங்களுக்குப் பிறகுதானே அதுபற்றியதான வாழ்வும், வாழ்வியல் பற்றிய சிந்தனைகளும்.



இந்தச் சமுதாயம் பெண்ணுக்கான இயல்புகள் என்று தீர்மானித்து வைத்திருக்கின்ற இயல்புகளை ஒட்டியோ, பின்பற்றியோதான் ஒவ்வொரு பெண்ணின் பாதைகளும் பயணங்களும் இருக்கின்றன. தன் பயணங்களைத் தன் இயல்பில் தீர்மானிப்பதும், பாதைகளைத் தேடிச் சேர்வதும் என்பது ஒரு பெண் சிந்திக்க இயலாததாகவே இருக்கின்றது.

முனையடிக்கப்பட்ட கயிற்றில் கட்டப்பட்ட செக்கு மாட்டுத்தனமான, யாராலோ தீர்மானிக்கப்பட்ட வாழ்வு மாறிய காலங்களிலும் கூட கயிறுகளின் நீளம்தான் கூடியிருக்கிறதே தவிர, கட்டப்பட்டிருக்கும் முனைகள் பிடுங்கப்படவில்லை.

குழந்தையாக இருக்கும் போதே குழந்தைக்கான இயல்புகள் மறக்க வைக்கப்பட்டு 'பெண் குழந்தைக்கான' இயல்புகள் நம்முள் திணிக்கப்படுகின்றன.

முளை விடும் போதே அவளது மூளைக்குள் பெண் என்பதற்கான வித்துக்கள் முளைக்க வைக்கப்பட்டு விடுகின்றன. தன் இயல்புகளை உணரக் கூடிய தருணங்களை அறியாமலேயே தனக்கெதிரான தீர்மானங்கள் தன் முன்னே தனக்காக வென்று வைக்கப்படுவதையும் உணராது பெண்கள் இருப்பதே மிகக் கவலைக்குரிய விசயமாகும்.

குழந்தையாக இருக்கும் போதே இப்படி யென்றால், பெண் பருவமடைந்த பின்னோ அவளது வட்டங்களின் ஆரம் இன்னமும் சுருங்கி விடுகின்றது. திருமணத்திற்குப் பின்னோ அவளது சுதந்திரம் யாரோ தரக்கூடியதாக மாறிவிடுகின்றது.

ஒரு பெண்ணின் வாழ்வென்பது அவளின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டிராது, யாரோ சிலரின் வாழ்க்கை சார்ந்த விசயமாகவே கணிக்கப்படுகின்றது. கட்டமைக்கப்பட்ட சமுதாயத்தின் இயல்புகளைச் சுமந்து கொண்டிருக்கும் சராசரிப் பெண்களை விடுங்கள்.

தன் இயல்புதனை உணர்ந்து சமுதாயச் சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டித் திருத்த விரும்பும், முற்போக்குச் சிந்தனைகளை முன்னிறுத்தும் இலக்கியப் படைப்பாளிகளே இன்னும் பெண் வாழ்வு ஆணைச் சார்ந்திருப்பதாய் மனச் சிந்தனையில் கொண்டிருப்பது ஆதிக்க மனோபாவங்களும், அடிமைச் சிந்தனைகளும் நமக்குள் புரையோடிப் போயிருப்பதை எடுத்துரைக்கும்.

சென்னையில் நடந்த ஒரு கூட்டத்தில் ஞானக்கூத்தன் பேசும்போது, பொது வாழ்வில் கலைஞர்களாகும் பெண்கள் வாழ்க்கையில் வெற்றி பெறவில்லை என்றும், அதற்கு உதாரணமாய் ஔவையைக் குறித்தும் பேசுகிறார்.

முற்போக்குச் சிந்தனைகளைப் பதிவு செய்யும் இவர்கள் கூட, பெண் வாழ்க்கை என்பது ஆணைச் சார்ந்திருப்பதாய் நினைவில் இருத்திக் கொண்டிருப்பது வருத்தத்திற்குரிய விசயமே.

இது ஆண்களை மட்டும் சுட்டுவிரல் நீட்டும் விசயமல்ல் பெண்களும் கூட இந்தச் சார்ந்திருப்பில் ஒரு சுகம் கண்டு பழகி விட்டனர்.

ஒரு பெண் கவிஞர், தன் கவிதைத் தொகுப்பு தயாரிப்பைப் பற்றி பேசும் போது 'எனது கவிதைகள் ஒரு பிரபல கவிஞரிடம் திருத்தங்களுக்காகக் கொடுக்கப் பட்டிருக்கின்றது' என்கிறார்.

தன் இயல்பின் சிந்தனைகளை அதன் ஓட்டம் கெடாமல் யாரால் திருத்த இயலும். தன் இயல்பின் மேல், தன் சிந்தனைகளில் மேல், தன் கொள்கைகளின் மேல், தன் படைப்பின் மேல் நம்பிக்கையற்றவர்களின் படைப்பு எப்படி சமுதாயத்தின் பிரதிபலிப்பாய் இருக்க இயலும்.

பெண் என்று தீர்மானிக்கப்பட்டு விட்ட வாழ்வுக்குள் தன்னைத் திணித்துக் கொள்வதாலும், சார்ந்திருப்பதாலும் தமக்குள் விளைவிக்கும் உணர்வுச் சிதைவுகளை உணரக் கூட சக்தி யற்றவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

சின்ன உதாரணம்ஒன்று, தாய்வீடு செல்வதும், செல்லாமலிருப்பதும் இரண்டுமே தண்டனைகளாக ஆண்கள் மத்தியில் மட்டுமன்றி பெண்களே கருதக்கூடிய நிலை இருந்து வருகின்றது.

அம்மா வீட்டுக்கு அனுப்பி விடுவோம் என்பதும், அம்மா வீட்டாரோடு சந்திப்பு கூடாது என்பதும், பெண்களை மிரட்டிப் பணியவைக்கப் பயன்படும் வாக்கியங்களாக இருந்து வருகின்றன.

இதைப்பற்றிப் பேசும்போதே 'பெண்களே பெண்களுக்கு எதிரி' என்கின்ற சொல்லாடலும் நம்மிடமிருந்து வந்து விடுகின்றது.

ஒன்று யோசித்துப் பார்க்க வேண்டும். ஒரு வீட்டில் இருக்கின்ற மாமியாரும், மருமகளும் அந்த வீட்டின் தலைவனைச் சார்ந்து இருக்க இந்த சமுதாயத்தால் பழக்கப்பட்டு இருக்கின்ற னர். இங்கே யார் முதன்மைப் படுத்தப்படப் போகிறார் கள் என்கிற கேள்வி இவர்கள் சார்ந்திருப்பதன் பலனாக விளைகின்றது. அதனால் வலுவானவர்கள் கையில் ஆதிக்கமும், இளைத்தவர்கள் கையில் அடிமைத் தனமும் தங்கி விடுகின்றது.

சார்ந்திருப்பை அகற்றி இயல்புகளை உணரப் பழகிவிட்டால் ஆதிக்கம் மற்றும் அடிமைத்தனம் என்ற இரண்டுமே விலகிவிடும்.

அன்றாட வாழ்வே நமக்கானதாய் இல்லாதிருக்கும் போது கலை, இலக்கியம் பெண்களுக்குள் எவ்வகையான பாதிப்புகளையும் நிலைப்பாட்டையும் உருவாக்கியிருக்கின்றது என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

1.பண்டைய இலக்கியங்கள் ஏற்படுத்தி வைத்துள்ள நிலைப்பாடுகள்.

2. இன்றைய இலக்கியமும் பெண்களும்.

பண்டைய இலக்கியங்கள் ஏற்படுத்தி வைத்துள்ள நிலைப்பாடுகள் பற்றிப் பேசும்போது, இன்றைய விசயத்திற்கு வருவோம் என்று அதை விட்டு விட முடியாது. நமது இதிகாசங்கள், பழங்கதைகள் நமக்குள் பல விசயங்களை வேரோடிப் போகச் செய்திருக்கின்றன. கற்பு, ஒழுக்கம், இருப்புப் பற்றி பண்டைய இலக்கியங்கள் விதைத்து விட்டுப் போன உணர்வுகளைக் கடந்துவிட முடியாதவர்களாகவே ஒவ்வொருவரும் பயணிக்கின்றோம்.

பெண்ணுக்குள் அடிமைத் தனங்களை விதைத்தது போல் ஆணுக்குள் ஆதிக்க மனோபாவங்களையும் விதைத்துள்ளன. அதற்கான பழமையான விசயங்களைத் தூக்கி எறிவது புதுமையல்ல. அவற்றை இன்றைய காலகட்டங்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப புணரமைப்பதும் நம் கடமையாகிறது. பழமைகள் நம் செல்வங்கள்? வைத்துப் பூட்டிப் பாதுகாக்காமல் நல் வழியில் அவற்றைச் செலவிட வேண்டும்.

அகலிகைகள் வேண்டும்? சந்தேகப்படும் கணவனைச் சாபமிடும் அகலிகைகள் வேண்டும். பாஞ்சாலி வேண்டும்? பாண்டவர் வெற்றியில் கூந்தல் முடியாது தன் வெற்றியைத் தேடிப் புறப்படும் பாஞ்சாலிகள் வேண்டும்.

இந்தப் புனரமைப்புகள் பெண் மொழியில் சொல்லப்பட வேண்டும். அது என்ன பெண் மொழி? இதுவரை படைக்கப்பட்ட எல்லா படைப்புகளுமே ஆணின் குரலாகவே பதிவாகி இருக்கின்றது.

---

*எங்கும் சுதந்திரம்*

*என்பதே பேச்சு - நாம்*

*எல்லோரும் சமமென்பது*

*உறுதியாச்சு*

---

இராமன் சந்தேகத்திற்கு தீக்குளிக்கச் சொன்னது ஆண்குரல், பெண் குரலாயிருந்தால் நிச்சயமாய் சம்மதித்திருக்க மாட்டாள்.

பண்டைய இலக்கியங்கள் மட்டுமல்ல, இன்றைய முதலாம் வகுப்புப் பாடப் புத்தகங்களில் குடும்பம் பற்றி வரும் படங்களில் கூட ஆண்குரல்தான் பதிவாகியுள்ளது. தந்தை அமர்ந்து செய்தித்தாள் வாசிப்பதையும், தாய் சமையல் வேலை செய்வதையும் படம் சித்தரிக்கிறது.

'கீரைக்காரி வந்தால் அம்மாவைக் கூப்பிடவும் செய்தித்தாள் வந்தால் அப்பாவிடம் கொடுக்கவும் யாரும் சொல்லித் தராமலேயே கற்றுக் கொள்கிறது குழந்தை' இன்றைய இலக்கியம் படைக்கும் பெண்கள் கூட தனக்கு முன்னால் இருந்து கொண்டிருக்கும் ஆண்படைப்பாளிகளைச் சார்ந்தும், அவர்களின் வழி நடத்தலிலும் தான் இருக்கின்றார்கள். பெண், ஆண்போல் மாறுவது சுதந்திரமல்ல் அவரவர் அவரவராக இருப்பதுவே சுதந்திரம் - சுதந்திரம் பற்றியப் பேச்சு எழும்போது விட்டுக் கொடுத்தல் போய்விடுமோ என்கின்ற பயம் பலருக்குள் இருக்கின்றன. நீ எனக்காக விட்டுக் கொடுக்கலாம். நான் உனக்காக விட்டுக் கொடுக்கலாம். இருவரும் சமுதாயத்திற்காக விட்டுக் கொடுக்கலாம். ஆனால் பெண் என்பதற்காக விட்டுக் கொடுக்க நேருமானால் எதிர்ப்பு குரல்களைப் பலத்து ஒலிப்போம். பெண் மொழி, உடல் மொழி எல்லாம் போய் 'மனித மொழி' பேசப்பழகுவோம்.

*எங்கும்*

*நிறைந்திருப்போம்*

ஒரு பேப்பர் ORU PAPER

# இழந்த உறவுகள்

## பெரிய நீலாவணை, தமிழீழம்

மண்கும்பாண், வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு, பெரியநீலாவணையை வசிப்பிடமாகவும் தற்போது கல்வியங்காட்டில் வசிப்பவருமான திருமதி செல்வமதி நித்தியானந்தக்குருக்கள் (குண்டுமணி) அவர்கள் (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் ச.நித்தியானந்தக்குருக்களின் அன்பு மனைவியும் மதிரெத்தினம், அமரத்துவமடைந்த திருஞானசம்பந்தர் ஐயர் தம்பதிகளின் ஏகபுத்திரியும் அபர்ணா, நிராகுலன், நிசாகரன், நிமேகாந், நிமல்ராஜ் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

## யாழ்ப்பாணம், தமிழீழம்

யாழ்ப்பாணத்தைப்பிறப்பிடமாகக்கொண்ட திருமதி. அன்னம்மா தம்பிராஜா கடந்த ஆடி மாதம் 27ஆம் நாள் காலமானார். இவர் திரு. திருமதி. ஞானப்பிரகாசம் றோசி இணையரது அன்பு மகளும், தம்பிஜயா அவர்களது வாழ்க்கைத் துணைவரும் ஆவார்.

## யாழ்ப்பாணம், தமிழீழம்

யாழ்ப்பாணத்தைப்பிறப்பிடமாகக்கொண்ட திரு. அன்ரன் ஆனந்தநாயகம் கடந்த ஆடி மாதம் 25 ஆம் நாள் காலமானார். இவர் திரு. திருமதி. மனுவேற்பிள்ளை - சுசான் அம்மா இணையரது அன்பு மகனும், ஸ்மைலி அவர்களது வாழ்க்கைத் துணைவரும் ஆவார்.

## இணுவில், தமிழீழம்

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி. மகேஸ்வரி அம்பலவாணர்? கடந்த ஆடி மாதம் 25ஆம் நாள் காலமானார். இவர் திரு. திருமதி. அப்பாத்துரை சின்னம்மா இணையரது மகளும், அம்பலவாணர் அவர்களது வாழ்க்கைத் துணைவரும் ஆவார்.

## புங்குடுதீவு, தமிழீழம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. இளையதம்பி தர்மலிங்கம் கடந்த ஆடி மாதம் 25 ஆம் நாள் காலமானார். இவர் திரு. திருமதி. இளையதம்பி - இளையபிள்ளை இணையரது அன்பு மகனும், கனகம்மா அவர்களது வாழ்க்கைத் துணைவரும் ஆவார்.

## கொக்குவில், தமிழீழம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. நாகர் பொன்னம்பலம் தேவராசா கடந்த ஆடி மாதம் 26ஆம் நாள் காலமானார். இவர் திரு. திருமதி. பொன்னம்பலம் இணையரது மகனும், இந்திராணி அவர்களது வாழ்க்கைத் துணைவரும் ஆவார்.

## அச்சுவேலி, தமிழீழம்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கதிரவேலு அவர்கள் (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும், பரமேஸ்வரியின் வாழ்க்கைத் துணைவரும், வசந்தா, கிசோர்த்தா (சுவிஸ்), விநோதினி (ஸ்ரீலங்கா ரெலிகொம்), தபோதினி (கால்நடை வைத்திய அதிகாரி) ஆகியோரின் தந்தையும் ஆவார்.

## கந்தரோடை, தமிழீழம்

கந்தரோடையைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் கிருஷ்ணர் 07.08.2004 சனிக்கிழமை அமெரிக்காவில் காலமானார். இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும் பாலசுப்பிரமணியம் (அமெரிக்கா), பாலச்சந்திரன் (அமெரிக்கா), சிவானந்தன் (கனடா), சர்வானந்தன் (கனடா), தனலட்சுமி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

## குரும்பசிட்டி, தமிழீழம்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது 179/3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா குணரத்தினம் அவர்கள் (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற குணரத்தினத்தின் அன்பு மனைவியும் மங்களராணி (முன்னாள் ஆசிரியர், வயாவிளான் ம.ம.வி), மங்களவதனி (ஆசிரியர், யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆவார்.

## புத்தூர், தமிழீழம்

புத்தூரைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கில் வசித்தவருமான தாமோதரம்பிள்ளை வேல்நம்பி அவர்கள் (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் தாமோதரம் பிள்ளை - தங்கம்மா ஆகியோரின் பாசமிகு ஏகபுத்திரரும் நல்ல நாயகி அம்மாவின் வாழ்க்கைத் துணைவரும் ஆவார்.

## கரவெட்டி, தமிழீழம்

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வரப்பிரகாசம் ஞானம்மா அவர்கள் (08-08-2004) ஞாயிற்றுக்கிழமை பரந்தனில் காலமானார். இவர் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை வரப்பிரகாசத்தின் அன்பு மனைவியும் செல்வராசா (அமெரிக்கா), தவராசா (தவம்), திருமதி மேரிகொன்ரெக்சன் துரைராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

## யாழ்ப்பாணம், தமிழீழம்

யாழ்ப்பாணம், வேலணையைப் பிறப்பிடமாகவும், வவுனியா பூந்தோட்டத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா கணபதிப்பிள்ளை அவர்கள் (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற சுங்க அதிகாரி) அன்பு மனைவியும், அருந்தவராணியின் பாசமிகு தாயாரும் ஆவார்.

**இலவச சேவை!**

நீங்கள் அறிந்தவர்கள், தெரிந்தவர்கள், உறவுகள் யாராவது அண்மையில் காலம் ஆகி இருந்தால் அவற்றை எமக்கு அறிவியுங்கள். 'எம்மக்களின் நலன்கருதி இப்பகுதியில் அவ்வறிவித்தல்கள் இலவசமாகப் பிரசுரிக்கப் படும். விவரங்களை எழுதி அனுப்பவேண்டிய தொலைப்படி எண்: 020 8640 6972, தொலைபேசி எண்: 020 8640 4604

GLEN CARRIERS Ltd.
The most trusted name in the business

TRAVEL - SHIPPING
AIR FREIGHT

TRAVEL AND UNACCOMPANIED BAGGAGE BY SEA AND AIR TO COLOMBO AND OTHER WORLD WIDE DESTINATIONS, AT THE MOST ECONOMIC RATE

THE MOST EASY CLEARANCE OF YOUR CARGO AT OUR MODERN BONDED WAREHOUSE

LAKSIRISEVA, 66 NEW NUGE ROAD, PELIYAGODA

SriLankan Airlines · Saudi Arabian Airlines · Qatar Airways · Czech Airlines · Royal Jordanian · KUWAIT AIRWAYS · Cyprus Airways

14 Allied Way, off Warple Way, Acton, London, W3 0RQ
Tel: 020 8740 8379, 020 8749 0595, 020 8743 7353
Fax: 020 8740 4229

E-Mail: glencarriers@aol.com Website: http://www.glencarriers.co.uk

ATOL IATA

ஸ்ரீ தேவி கருமாரி ஜோதிடம்



பரம்பரை வழி வந்த ஜோதிட வல்லுனரால்
ஜாதகம், எண்கணிதம், கைரேகை, முகநாடி
இவைகளை அம்பாளின் ஆசியுடன் கணித்து
சொல்லப்படும். குறைகள் இருப்பின்
பரிகாரங்களும் செய்யப்படும்.

ஜோதிட சக்கரவர்த்தி சக்தி பாலஜோசியர் அவர்கள்
இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ளார்.

SRI LANKA FAMOUS ASTROLOGER SOLVE ALL YOUR PROBLEMS

Light up your life....
Today to a great extent

PRIOR APPOINTMENT WOULD BE APPRECIATED

ARULMIGU MEENAKSHI SUNTHARESWARAR THIRUKOVIL (Wimbledon Sivan Temple)
100-106, Haydons Road, Wimbledon, London, SW19 1AW

Mobile: 079 569 358 16
Email: sakthi_sakthi@vsnl.net

SRI DEVI KARUMARI JOTHIDAM
7, Murrays Gate Road, Alwarpet, Chennai – 600 018 INDIA

# கவிதை

## திரைகடலோடியும் . . .

தாய்மொழியின்
பெயரைக்கூட
தவறாக உச்சரிக்கும்
உன் குழந்தை.

தற்பெருமை இதில் உனக்கு.

ஐந்து வயதிலேயே
அந்நியமொழி அறிவில்
அசத்திவிடுகிறதென்று.

உண்ணும் முறையிலிருந்து
உணவு வகைகள்வரை
உதறி விட்டாய்
உன்னுடைய தெல்லாம்

உனக்கும் உன்துணைக்கும்
உத்தியோக உயர்வே
உன்னத லட்சியம்

'மெய்ட்'ன் அடிஅணைப்பில்
மெய்யன்பு தேடும்பிள்ளை.

குழந்தை
கற்கும் கலைகள்கூட
உலகத் தரத்திற்கு
உதவாதாம்
உன்னாட்டுச் சரக்கெல்லாம்.
போனமுறை போனபோதுகூட

பள்ளிக்கால நண்பனிடம்
பழகிப்போன 'தமிங்கிலத்தில்'
பீற்றிக் கொண்டாய்,

பத்துப் பதினைந்து
வருடமாயிற்றாம்
பழம் பஞ்சாங்கங்களை
உதறியெறிந்து.

ஆஹா,
என்ன இறுமாப்பு !

பதினாறில் பெண்
'டேட்டிங்'போக பதறிப்
போய்விடுகிறாய் !
பண்பாடு பேசுகிறாய் !

'புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும்
புலையராகி வாழலாமா?'
புரியாத வேதாந்தம்
பிள்ளையிடம் பேசுகிறாய் !

என்ன கூத்து இது?

புல்லும் தின்ன வேணும்,
புலியெண்டு பேரும் வேணும் ! !
புரியவில்லை உன் போக்கு . . .

— வை. கலைச்செல்வி

## வெளிநாடு

உக்ரெய்னில் உருக்குலைந்து
சிங்கப்பூரில் சின்னாபின்னமாகி
பாங்கொக்கில் பசியிருந்து
இனியென்ன கவலையென
இங்கிலாந்து வந்து சேர்ந்து
கள்ள இலக்கத்தில் வேலை பார்த்தகாசு
சட்டத்தரணிக்கே சரியாயிருக்க
சொந்தகாணி உறுதி அறுதியாக
வட்டி குட்டி போட
கடிதம் ஒட்டுவதற்கு கூட சோறு இல்லாமல்
தண்ணீர் தொட்டு ஒட்டிய கடிதம்
பாதியாய் பிரிந்திருக்க
வாரம் ஒருமுறையென
கையொப்பமிடச்சென்று
லண்டன் பிறிட்ச் ரிக்கட் பரிசோதகரும்
பழக்கமாகி விட
விழ விழ எழும் ஆலம் விழுதைப்போல்
நெஞ்சில் உறுதியாய் நடக்கின்றோம்
பரலோகத்து பிதாவே
பதில் ஒன்றை தாருமய்யா
பாரபட்சம் காட்டுமய்யா

— கிருஷ்ணசாமி நித்தியானந்தன்

## old is gold

### காளமேகம்

சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்றுப்
பொருக்குலர்ந்த வாயா புலையா — திருக்குடந்தைக்
கோட்டானே நாயே குரங்கே உனையொருத்தி
போட்டாளே வேலையற்றுப் போய்

காளமேகப் புலவர் ஒரு முறை கடும் பசியோடு சத்திரத்துள் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். புலவரின் முன்னே சோழநாட்டுப் பிராமணர் ஒருவர். சோழநாட்டுப் பிராமணர்கள் நெற்றியில் தான் குடுமி கட்டுவர்கள். அப்பிராமணர் சாப்பிட்டுக் கொணடிருக்கையில் குடுமி அவிழ்ந்து சாப்பாட்டுக்குள் வீழ்ந்து விட்டது. சோற்றுக்கையாக இருந்த படியால் தலையால் தன் கூந்தலை எற்றி பின்னே தள்ளி விட்டார் அப்பிராமணர். கூந்தலில் இருந்த சோறு புலவரின் இலையில் போய் விழுந்தது. கடும் கோபமுற்ற புலவர் பாடிய வசைக்கவி வெண்பா இது. (கி.பி. 15 ஆம் நூற்றாண்டு).

### புகழேந்திப்புலவர்

இவ்வளவில் செல்லுங்கோல் இவ்வளவில் காணுங் கோல்
இவ்வளவில் காதல் இயம்பும் கோல் — இவ்வளவில்
மீளும் கோல் என்றுரையா விம்மினான் மும்மதம் நின்று
ஆளும் கோல் யானை அரசு.

நளமகராசன் தமயந்தியிடம் தன் காதலைத் தெரிவிக்க அன்னத்தை தூதாக அனுப்பிய போது தன்னுள் நினைவதாக புகழேந்திப்புலவரால் பாடப்பட்டது. (கி.பி. 13ஆம் நூற்றாண்டு)

"இந்த நேரம் சென்றிருக்குமோ இந்த நேரம் தமயந்தியைக் கண்டிருக்குகோ இந்த நேரம் தன்னுடைய காதலை தமயந்தியிடம் சொல்லியிருக்குமோ சொல்லிய பிறகு இவ்வளவு நேரத்தில் மீண்டிருக்குமோ?" என்று ஒன்றும் தெரியாது தன்னுள் அழுதான் - அழுதவன் யாரென்றால்? மதம் கொண்ட யானையை அடக்கி அரசாண்ட நளமகராசன்.

## உன் ஞாபகம். . .

இப்போதெல்லாம் அடிக்கடி
உன் ஞாபகம்தான்

பள்ளிக் காலங்களில்
நான் உன்னை ரொம்பவும்
கஸ்டப் படுத்தி விட்டேனா
அம்மா

ஒரு நாளேனும்
உன் உணர்வுகளை மதித்து
உன்னை மகிழச் செய்தேனா

நீ இல்லாத
இந்நாட்களில்தான்
இங்கே உன் இழப்பின்
கொடூரம் புரிகிறதம்மா
உன் பேத்தியின்

இந்த புது அவதாரம்
தினமும் நம்மை நினைவு
படுத்தத்தான் என நினைத்துக்
கொள்கிறேன்

நானும்
உன் புன்னகையை
இதழ்களில் ஏந்தி
பொறுமையையும்
பழகி வருகிறேன்

அந்நாட்களில் உன்னை
அதிகம் சிரமம் செய்ததாக
உணர்ந்து வருந்துகிறேன்
காலங்கள் கடந்தபின். . .

— மதுமிதா.




## மேடை

இதுவரை
இருபது முறைகளுக்கு மேல் - எதிரிகளை
எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் - என்றாய்
சலனமற்றுக் கிடந்த - உன்
ஆதரவாளர்களின் முன்னிலையில்

நான் சொல்லிக் கொள்வது - என்னவென்றால்
என்பதைத் தாண்டி
எதுவுமே விளங்கவில்லை
நீ சொல்லிக் கொண்டது எதுவும்.

இன்னொன்றையும்
குறிப்பிட்டாக வேண்டும் என்று
பலமுறை அறிவித்தாய்!
ஆயினும்,
ஒருமுறைகூட
குறிப்பிடவில்லை
அந்த இன்னொன்றை!

இறுதியாக ஒன்றைச் சொல்லி
விடைபெறுவதாக முழங்கினாய்
அந்த ஒன்றையாவது
சொல்லிவிட்டுப் போயிருக்கலாம்

— ஜெயபாஸ்கரன்

## உண்மை



*கண்* வரைந்த கணனி
உணர்வுகளைக் கொட்டவில்லை
*ஒளி* உமிழ்ந்த நிழற்படமோ
உள்ளமதன் உணர்வலைகள்
*வரைந்த* கோட்டுக் கிறுக்கல்களில்
வெளிப்பட்ட புன்சிரிப்பு
*வரலாற்றுப்* பயணத்தில் அவள்
நெடுந்தூர நடைபாதை
*பதிவு* சிலவற்றில் வடுக்கள்
ஏற்படுத்தும் உள்வலி
*ஒரு* கணப்பொழுது உருக்குலைக்கும்
உள்ளத்தைத் தாங்கி
*பேப்பர்* வலுவூட்ட நம்பிக்கையோடு
நடைபயிலும் இறுமாப்பு.

— மீனாட்சி

வீடியோ,
நிழல் படப்பிடிப்புகள்
TAMIL VISION
020 8540 3251

கிங்ஸ்ரனில்
OFF LICENCE
கடை விற்பனைக்கு
15 வருட காலத்திற்கான
குத்தகை
வாரம் £7,000 இற்கு
விற்பனை
சமீபத்தில் £20, 000
இற்கு கடை புனரமைப்பு
செய்யப்பட்டது
£87,000 விலை
தொடர்புகட்கு
07940 576 008

ஆங்கிலம் பேசுவோம்
வியாபார விடயங்களில் ஆங்கிலம் பேச.
வேலைத்தலங்களில் உங்கள் உத்தியோக தரத்தினை உயர்த்த.
ஆங்கிலம் சரளமாக பேச.
பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களின் உதவியுடன்.
ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
தொடர்புகளுக்கு: பாலா 020 8640 4604

வரவிருக்கும் படங்கள்: ஆட்டோகிராப் மானஸ்தன் ஏறுமுகம் திலக் நீ மட்டும் காதல் சரிகம ஜெய்ராம் பேரழகன்

ttn



0208100000

அருள் குத்து கண்களால் கைது செய் கில்லி ஜோர்

## நிகழ்ச்சி நிரல் 21 ஒகஸ்ட் - 27 ஒகஸ்ட் வரை

### சனி

07.00 மங்கள வாத்தியம்
07:30 அரும்புகள்
08:00 சைவநிகழ்ச்சி
08:30 புலரும் பொழுது புலரும்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 அப்பா வாரம்
12:30 பார்தேன் பகர்ந்தேன்
13:00 ஹாலிவூட் நேரம்
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து **பைலட் பிறேம்நாத்**
16:30 வெள்ளித்திரை
17:00 நாடி
17:30 வண்ணச்சிறகடித்து
18:00 குண்டக்கா மண்டக்கா
18:30 தாயக வலம்
19:00 இசைச் சிற்பிகள்
19:30 கதிரவன்
20:00 செய்தி நேரம்
20:30 ஆயிரத்தில் ஒருவர்
21:00 நையாண்டி மேளம்
21:30 திரைவிருந்து **அலை**

### ஞாயிறு

07.00 இசையருவி
07:30 அரும்புகள்
08:00 கிறிஸ்தவ நிகழ்ச்சி
08:30 ஒலிம்பிக் 2004
09:30 ஒளிக்கீற்று
10:30 வணக்கம் ஐரோப்பா
11:00 தாயகவலம்
11:30 புதினக்கண்ணாடி
12:00 நாவூற வாயூற
12:30 முளைவிடும்பதியன்
13:00 திரைமுகம்
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து **சேரன் பாண்டியன்**
16:30 திரையிசை வரிசை
17:00 தமிழீழ காவல்துறை
17:30 ஓவியா
18:00 படலைக்குப் படலை
18:30 ஒளித்தடம் (குறும்படம்)
19:00 வைத்தியலிங்கம் ஷோ
19:30 கதிரவன்
20:00 செய்தி நேரம்
20:30 ஜலக்கிரீடை
21:00 சுப்பர்மடம்
21:30 திரைவிருந்து **கொடி பறக்குது**

### திங்கள்

07:03 புலரும் பூபாளம்
07:30 யோகாசனம்
08:00 புத்தம் புதுக்காலை
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 சித்திரம் பேசுதடி
11:00 என்றென்றும் புன்னகை
11:30 தாயகவலம்
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 பஞ்சமி
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து **மஞ்சள் நிலா**
16:30 நேருக்கு நேர்
17:00 கலைச்சரம்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும் மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 அப்பா
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 கணினி விழிகள்
21:30 திரைவிருந்து **கல்யாண வைபோகம்**

### செவ்வாய்

07:03 புலரும் பூபாளம்
07:30 யோகாசனம்
08:00 புலரும் பொழுது புலரும்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 வெள்ளித்திரை
11:00 வைத்தியலிங்கம் ஷோ
11:30 ஹலிவூட் நேரம்
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 பஞ்சமி
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து **புதிய பாரதம்**
16:30 புதினக் கண்ணாடி
17:00 நினைவலைகள்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும் மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 அப்பா
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 அத்தை
21:30 தாயகவலம்
22:00 எட்டாதகொப்பு
23:00 செய்திக் கண்ணோட்டம்

### புதன்

07:03 புலரும் பூபாளம்
07:30 யோகாசனம்
08:00 புலரும் பொழுது புலரும்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 தமிழீழகாவல்துறை
11:00 நாடி
11:30 நையாண்டி மேளம்
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 பஞ்சமி
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து **ரத்ததானம்**
16:30 முளைவிடும் பதியன்
17:00 கலைமுற்றம்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும் மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 அப்பா
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 விழிகள்
21:30 ஜன்னலைத் திறந்து வையுங்கள்
22:00 திரைவிருந்து **தங்க மனசுக்காரன்**

### வியாழன்

07:03 புலரும் பூபாளம்
07:30 யோகாசனம்
08:00 புத்தம் புதுக்காலை
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 இசைச் சிற்பிகள்
11:00 என்றென்றும் புன்னகை
11:30 சிறகு சுப்பர்
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 பஞ்சமி
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து **சின்ன சின்ன ஆசை**
16:30 பார்த்தேன் பகர்ந்தேன்
17:00 உளவியலும் நாங்களும்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும் மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 அப்பா
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 அத்தை
21:30 விளையாட்டு
22:00 சங்கம நேரம்
23:00 கோலிவூட் பார்வை
23:30 இரவின் தாலாட்டு

### வெள்ளி

07:03 புலரும் பூபாளம்
07:30 யோகாசனம்
08:00 புலரும் பொழுது புலரும்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 ஜன்னலைத் திறந்து வையுங்கள்
11:00 திரைமுகம்
11:30 படலைக்குப் படலை
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 பஞ்சமி
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து **நினைக்கத் தெரிந்த மனமே**
16:30 ஒளித்தடம் (குறும்படம்)
17:00 ஜேர்மன் நேரம்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும்மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 அப்பா
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 ஒலிம்பிக் 2004
21:30 திரைவிருந்து **தந்துவிட்டேன் என்னை**









## நிகழ்ச்சி நிரல் 28 ஒகஸ்ட் - 03 செப்டெம்பர் வரை

### சனி

07.00 மங்கள வாத்தியம்
07:30 அரும்புகள்
08:00 சைவநிகழ்ச்சி
08:30 புலரும் பொழுது புலரும்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 அப்பா வாரம்
12:30 பார்தேன் பகர்ந்தேன்
13:00 ஹலிவூட் நேரம்
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து **தர்மத்தின் தலைவன்**
16:30 வெள்ளித்திரை
17:00 நலவாழ்வு
17:30 வண்ணச்சிறகடித்து
18:00 குண்டக்கா மண்டக்கா
18:30 தாயக வலம்
19:00 இசைச் சிற்பிகள்
19:30 கதிரவன்
20:00 செய்தி நேரம்
20:30 ஜலக்கிரீடை
21:00 நையாண்டி மேளம்
21:30 திரைவிருந்து **ஆட்டோகிராப்** (புதுப்படம்)

### ஞாயிறு

07.00 இசையருவி
07:30 அரும்புகள்
08:00 கிறிஸ்தவ நிகழ்ச்சி
08:30 ஒலிம்பிக் 2004
09:30 ஒளிக்கீற்று
10:30 வணக்கம் ஜரோப்பா
11:00 தாயகவலம்
11:30 புதினக்கண்ணாடி
12:00 நாவூற வாயூற
12:30 முளைளவிடும்பதியன்
13:00 திரைமுகம்
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து **என் ஆசை மச்சான்**
16:30 திரையிசை வரிசை
17:00 தமிழீழ காவல்துறை
17:30 ஓவியா
18:00 படலைக்குப் படலை
18:30 ஒளித்தடம் (குறும்படம்)
19:00 வைத்தியலிங்கம் ஷோ
19:30 கதிரவன்
20:00 செய்தி நேரம்
20:30 ஜலக்கிரீடை
21:00 ஊரோடும் உறவோடும்
21:30 திரைவிருந்து **வள்ளல்**

### திங்கள்

07:03 புலரும் பூபாளம்
07:30 யோகாசனம்
08:00 புத்தம் புதுக்காலை
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 சித்திரம் பேசுதடி
11:00 என்றென்றும் புன்னகை
11:30 தாயகவலம்
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 பஞ்சமி
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து **பகடை பன்னிரெண்டு**
16:30 நேருக்கு நேர்
17:00 கலைச்சரம்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும் மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 அப்பா
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 ஒலிம்பிக் 2004
21:30 திரைவிருந்து **ஆலயதீபம்**

### செவ்வாய்

07:03 புலரும் பூபாளம்
07:30 யோகாசனம்
08:00 புலரும் பொழுது புலரும்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 வெள்ளித்திரை
11:00 வைத்தியலிங்கம் ஷோ
11:30 கலிவூட் நேரம்
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 பஞ்சமி
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து **அன்று பெய்த மழையில்**
16:30 புதினக் கண்ணாடி
17:00 சங்கம நேரம்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும் மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 அப்பா
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 அத்தை
21:30 தாயகவலம்
22:00 எட்டாதகொப்பெல்லாம் தட்டிவா
23:00 செய்திக் கண்ணோட்டம்

### புதன்

07:03 புலரும் பூபாளம்
07:30 யோகாசனம்
08:00 புலரும் பொழுது புலரும்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 நேருக்கு நேர்
11:00 நாடி
11:30 நையாண்டி மேளம்
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 பஞ்சமி
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து **நான் பெற்ற செல்வம்**
16:30 முளைவிடும் பதியன்
17:00 கலைமுற்றம்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும் மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 அப்பா
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 விழிகள்
21:30 ஜன்னலைத் திறந்து வையுங்கள்
22:00 ஆடுகளம்
23:00 திசைகள் எத்தனை

### வியாழன்

07:03 புலரும் பூபாளம்
07:30 யோகாசனம்
08:00 புத்தம் புதுக்காலை
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 கோலிவூட் பார்வை
11:00 என்றென்றும் புன்னகை
11:30 சிறகு சுப்பர் மடம்
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 பஞ்சமி
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து **உன்னருகே நான் இருந்தால்**
16:30 பார்த்தேன் பகர்ந்தேன்
17:00 உளவியலும் நாங்களும்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும் மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 அப்பா
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 அத்தை
21:30 விளையாட்டு
22:00 மறக்கத்தகுமோ
23:00 சித்திரம் பேசுதடி
23:30 இரவின் தாலாட்டு

### வெள்ளி

07:03 புலரும் பூபாளம்
07:30 யோகாசனம்
08:00 புலரும் பொழுது புலரும்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 ஜன்னலைத் திறந்து வையுங்கள்
11:00 திரைமுகம்
11:30 படலைக்குப் படலை
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 பஞ்சமி
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து **அவன் அவள் அது**
16:30 ஒளித்தடம் (குறும்படம்)
17:00 ஜேர்மன் நேரம்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும்மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 அப்பா
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 விளையாட்டு.2004
21:30 திரைவிருந்து **மன்னவரு சின்னவரு**









நிகழ்ச்சி நேரங்கள் யாவும் ஐரோப்பிய நேரத்தின்படியே வழங்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சிகளில் நேர மாற்றங்கள் முன் அறிவித்தலின்றி மாற்றப்படலாம்.

## சிறுகதை



# அவள் அப்படித்தான்

– சுமதி ரூபன்

பயணம் நிச்சயம் ஆகி விட்டது. எனக்கான இருக்கை எண்ணை கத்திதமான ஒருத்தி சுட்டிக்காட்ட உடலை நுழைத்துக்கொண்டேன்.. நெருக்கமாக இருந்தது.. இடதுபக்கத்தில் பின்னால் இருந்து யாரோ பின்னால் குத்துவதுபோல் ஒருவித ஒலியை எழுப்பியபடியே பிலிப்பீனோ தம்பதி ஒருவர். சண்டை போடுகிறார்களா? சம்பாஷிக்கிறார்களா? புரியவில்லை.. புரிந்து என்ன பண்ணுவது.. தொடரும் ஆறுமணித்தியாலங்களிற்கு எனக்கான பின்ணணி இசை அது என்று மட்டும் புரிந்தது..

வலதுபக்கத்திலிருந்த வெள்ளப்பெண்ணிடமிருந்து வந்த விலையுயர்ந்த வாசனை தலையிடியைத் தந்தது.. சுற்றுமுற்றும் பார்த்தேன்.. கனடா பல்கலாச்சார நாடு என்பது உறுதியானது.. வடஇந்தியப் பெண்மணி ஒருத்தி கணவனின் உழைப்பில் குடும்பத்தைப் பார்க்க ஊருக்குப் போகிறாள் போலும்.. கழுத்து கைகள் எல்லாம் கணவனின் உழைப்பால் நிறைந்திருந்தது.. தலையணையை அணைத்தபடி எப்போது விமானம் கிளம்பும் குறட்டை விட்டுத் தூங்கலாம் என்பதான நிலையில் அவள் காத்திருந்தாள்.. எடுத்துச்சென்ற புத்தகத்தைக் கூட பிரிக்க முடியாத இறுக்கத்தில் இறுகிப்போய் நான்.. என்னைத் தவிர எல்லோருமே வாழ்வில் பலமணி நேரங்களை வீணடித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்ற எண்ணம் மீண்டும் எனக்குள் எழுந்தது.. நான் தயாரானேன்..பயணத்திற்காய்..

அவள் என்னை இறுக அணைத்துக் கொண்டாள்.. அதே நீள் சதுர முகம் வயதாகிப்போயிருந்தது.. கட்டையாய் வெட்டப்பட்ட தலைமயிரை தூக்கிக் கட்டியிருந்தாள்.. கருகருவென்றிருந்தது.. நிச்சயம் டை அடித்திருப்பாள்.. உடல் இறுகி ஆண் தனத்தைக் காட்டியது.. மீண்டும் அணைத்துக் கொண்டோம்.. எத்தினை வருஷமாச்சு.. இப்பவாவது வந்தியே.. என்னுடைய பையைப் பறித்து கழுத்தில் மாட்டியபடியே குதிரை போல் அவள் நடந்தாள்.. நீண்ட தலைமயிரும் மெல்லிய இடையும் நாணமும்.. கூச்சமுமாக பெண்களுக்கே ஆதாரமாக இருந்தவள்.. இன்று.. என்னை நான் குனிந்து பார்த்துக்கொண்டேன்.. விதியை நொந்தபடியே அவள் பின்னால் நான்..

லண்டனின் நெளிந்த குறுகிய ரோட்டும்.. நெருப்புபெட்டி போன்ற கார்களும் வினோதமாக இருந்தது.. அவள் ஆங்கிலப் பாடல் ஒன்றைப் ஓட விட்டு என் கைகளுக்குள் தன் கையைப் பிணைத்து நல்ல குண்டா வந்திட்டாய்.. அம்மா மாதிரி இருக்கிறாய் என்றாள்.. பிள்ளைகள் கணவன் குடும்ப வாழ்க்கை எல்லாம் எப்பிடிப் போகுது என்றாள்.. என் அளவில் எனது சந்தோஷங்கள் எனக்குப் பிடித்திருந்தது.. பெருமையாயும் இருந்தது.. அவளை நோகடிக்க விரும்பாது நான் சிரித்தேன்.. அவளும்..

கச்சிதம் என்ற வார்த்தைக்கு அர்த்தத்தை அவள் இருப்பிடத்திற்குள் புகுந்த போது புரிந்துகொண்டேன்.. வீடு ஒரு பல்கலாச்சார பள்ளியாய் சீனர்களின் சிரித்த வாய் குண்டுப் புத்தாவிலிருந்து.. கறுப்பர்களின் நார்பின்னல் தலையுடனான சின்னச் சின்னச் சிலைகள் ஓவியங்களுடன் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறு நாட்டவர்களின் கலையுணர்வைக் காட்டி நின்றது.. கண் விழித்து நான் வியப்போடு பார்க்க தனது வேலை அப்படிப்பட்ட தென்றாள்.. கட்டிடக்கலை ஆராய்ச்சில் தான் வேலை செய்வதாகவும் பல நாட்டு நண்பர்கள் தனக்கு இருப்பதாகவும் சொல்லி என்னை நான் தங்கும் அறைக்கு அழைத்துச் சென்று காட்டினாள்..

எல்லாமே புதுமையாகவும் கொஞ்சம் அதிசயக்கக் கூடியதாகவும் இருந்தது.. நான் அவளுடன் தங்கும் அந்த ஒரு கிழமையில் எங்கெல்லாம் செல்வது என்ன சாப்பிடுவது என்பதை மிகவும் நேர்த்தியாக எழுதி வைத்து என்னிடம் காட்டி சம்மதமா என்றாள்?.. அவள் எல்லாவற்றையும் ஒழுங்கு முறையோடு எழுதி வைத்து அதன்படி நடப்பது ஒரு வித செயற்கைத் தனம் போல் இருந்தாலும் அவள் எனக்காக எடுத்துக்கொண்ட பிரயத்தனம் என்னைக் கவர்ந்திருந்தது.. பதினைந்து வருட நண்பியை முதல் முதலாய் பார்ப்பது போல் வினோதமாகப் பார்த்தேன்.. இருந்தும் அந்த வீடு நிறைவற்றதாய் எனக்குள் பெருமூச்சை வெளிக்கொணர்ந்ததை தவிர்க்கமுடியவில்லை..

கால்கடுக்க லண்டன் ஹைட் பாக்கில் பொடேரோ சிப்ஸ் சாப்பிட்டபடியே பாடசாலை நாட்களை மீட்டு மீட்டு வாய்விட்டுச் சிரித்து மீண்டும் எம்மை சிறுமிகளாக்கி புளகாங்கிதம் அடைந்தோம்.. ஏன் இன்னும் கலியாணம் கட்டாமல் தனியா இருக்கிறாய் என்ற போது அவளின் தொலைபேசி ஒலித்தது.. என்னிடம் கண்ணால் பொறு என்பதாய் காட்டி விட்டு சிறிது தூரமாய் போய் சிரித்துச் சிரித்துக் கதைத்தவள்.. பின்னர் என்ர ப்ரெண்ட் மைக்கல் வெரி இன்ரறஸ்ரிங் பெலோ.. நைஜீரியன் யுனிவேர்சிட்டிலிய வேலை செய்யிறான்.. எப்ப பாத்தாலும் ரிசேஜ் அது இது எண்டு உலகம் சுத்துவான்.. இப்ப பிரான்ஸ்சில நிக்கிறானாம் இன்னும் ட்ரு வீக்ஸில இஞ்ச வந்திடுவன் எண்டான்.. நீ வாறது அவனுக்குத் தெரியும்.. உனக்கும் ஹாய் சொல்லச் சொன்னான்.. மூச்சு விடாமல் கூறியவள்.. சிறிது நிறுத்தி வந்தால் என்னோடதான் தங்கிறவன்.. என்றாள் இயல்பாய்..என் இயல்பு களங்கப்பட்டது..

குடும்பத்துடன் எத்தனை இடங்களுக்குச் சென்றுள்ளேன்.. எப்போதும் பதட்டமும் களைப்பும் அலுப்பும் எப்படா வீட்டிற்கு வருவோம் என்றிருக்கும்.. வீணான சிடு சிடுப்புக்கள் கோபங்கள்.. வெறிச்சிடும் வாழ்வு.. ஆனால் இப்போது.. இவள் வாழ்வின் ஒவ்வொரு விடயத்தையும் அர்த்தமாக்கி அனுபவிக்கிறாள்.. கணவன் குழந்தைகள்.. வீடு கார்.. அதற்கும் மேலாய் இன்னும் கொஞ்சம் போய் வாசிப்பு எழுத்து என்று என்னை மேன்மை படுத்தி பெண்ணியம் முற்போக்குத்தனம் என்று பவிசு பண்ணி.. மேதாவியாய் உலவி.. இப்போது.. என் முற்போக்குத்தனம் பெண்ணியக் கருத்துக்கள் என்னுள் முரண்டு பிடிக்கத்தொடங்கியது.. இருந்தும் எனக்குள் இவள் ஏன் இன்னும் கலியாணம் கட்டாமல்.. ஆண்களோடு இவ்வளவு க்ளோஸாக..?.

லண்டனில் பிரசித்தி பெற்ற சுற்றுலாப்பயணிகள் பார்க்க வேண்டிய இடங்கள் என்ற பட்டியலை முடித்து அவளது வேலைத்தளத்திற்கும் அழைத்துச் சென்றாள்.. பல இனத்து நாட்டவர்களும் அவளைக் கண்டதும் ஓடிவந்து அணைத்து என்னையும் சுகம் விசாரித்தார்கள்.. பாடசாலை நாட்களில் ஆண்களை நிமிர்ந்து பார்க்க மாட்டாள்.. ஆனால் இப்போது.. சரளமாக ஆண்களை அணைப்பது அவர்களின் கையைப் பிடித்தபடியே உரையாடுவது.. அவளின் இந்த போல்ட்நெஸ் எனக்குள் வியப்பாய்..விரிய.. அவள் இடுப்பை வளைத்துப் பிடித்திருக்கும் வெள்ளையன் ஒருத்தனை தானும் அணைத்து அவன் உதட்டில் முத்தமிட்டுஈரப்படுத்தி எல்லோரிடமும் இருந்து விடைபெற்றுக்கொண்டாள்.. நான் என்னிலிருந்து மீண்டு வர பல மணிநேரமானது.. லெமன் ரீக்குள் கொஞ்சம் தேனை விட்டு எனக்கு ஒரு கப்பை நீட்டியவள்.. சோபாவில் இரு கால்களையும் தூக்கிப்போட்டு தன்னை குஷனுக்குள் புதைத்து தனது ரீ கப்பை இரு கைகளாலும் அணைத்துப் பிடித்து வெளியேறும் சூட்டை உள்ளங்கைக்குள் வாங்கி ஒரு குழந்தையைப் போல் கவனமாகக் வாயருகே கொண்டு சென்று கண்களை மூடி முகர்ந்து பார்த்துப் பின்னர் ஒரு முறை மெதுவாக உறிஞ்சி.. ச்ஆஆ என்றாள்.. ஒரு தேனீரைக் கூட இவளால் எப்படி இவ்வளவு அலாக்காக அனுபவிக்க முடிகிறது..

மௌனமாக இருந்து விட்டு பின்னர் மீண்டும் கேட்டேன்.. ஏன் நீ இன்னும் கலியாணம் கட்டேலை..? ஏதாவது பேர்சனல் பிரைச்சனையா? இந்தளவு வயதாகியும் கலியாணம் கட்டேலை? மீண்டும் தொலைபேசி அழைத்தது.. அவளின் ஒவ்வொரு அசைவும் எனக்குள் அசிங்கமாகி.. உன்னிப்பாய் நான் கண்காணிக்க.. ஆங்கிலத்தில் அவள் உரையாடலில் காதல் தெரிந்தது.. இது யார் இன்னுமொருத்தனா? முதலில் நைஜீரியக் கறுப்பன் தன்னுடன் வந்து தனியாகத் தங்குவான் என்றாள்.. பின்னர் வெள்ளையனை அணைத்து முத்தமிட்டாள்.. இப்போது யார் சைனாக்காறனா? கடவுளே நல்ல காலம் நான் தனியாக இங்கு வந்தது.. இவர் வந்திருந்தால் இதுதான் உம்மட க்ளோஸ் ப்ரெண்டின்ர லச்சணமோ என்று கேட்டு என்னையும் தவறாகக் கணித்திருப்பார்..

அவள் தனது தனிமையை முழுமைபெறாத தனது வாழ்க்கையைப் பற்றிக் கதைக்காதது எனக்குள் எரிச்சலை ஏற்படுத்த எப்படியும் ஏதாவது சாக்குச் சொல்லி கெதியாக இங்கிருந்து கிளம்பிவிட வேண்டும்.. இவளோடு தனித்திருந்தால் தெரிந்தவர்கள் பார்வையில் பட்டு வைத்தால்? நானும் கணிக்கப்பட்டு விடுவேன்..வாய்க்குள் ஏதோ பாடலை முணுமுணுத்தவள்.. நான் அவளையே உற்றுப்பார்த்தபடி நிற்பதைக் கவனித்து விட்டு என்ன? என்பது போல் தலையை ஆட்டினாள்.. நீ இன்னும் கலியாணம் கட்டாமல் இருக்கிறதுக்கு ஏதோ பெரிய காரணம் இருக்க வேணும் சொல்ல விருப்பமில்லாட்டி விடு.. நான் முகத்தை தூக்கி வைத்துக்கொண்டேன்..

அவள் என்னைப் பார்த்து ஒரு விதமாகச் சிரித்தபடியே.. சரி சொல்லு. நீ சந்தோஷமா இருக்கிறாயா? கேட்டாள்.. ஓம் அதில என்ன சந்தேகம்.. நல்ல அண்டஸ்ராண்டிங்கான புருஷன் நல்ல வடிவான கெட்டிக்காரப் பிள்ளைகள்.. வசதிக்கும் குறைவில்லை.. அதோட என்ர வாசிப்பு எழுத்து எண்டு எவ்வளவு சந்தோஷமா இருக்கிறன்.. இதுக்கு மேல ஒரு பொம்பிளைக்கு என்ன வேணும் சொல்லு என் முகத்தில் அதி உயர்ந்த பெருமை வழிய.. அவள் என்னை உற்றுப் பார்த்தாள்.. அவள் கண்களின் தீவிர ஒளி எனைத் தாக்க நான் பார்வையைத் தாழ்த்திக்கொண்டேன்.. என் கைகளைப் பற்றிய படியே அவள் சொன்னாள்.. நீ சந்தோஷமா இருக்கிறாய் எண்டதை முற்றும் முழுதாக நான் நம்பிறன்.. ஏன் கலியாணம் கட்டினனீ பிள்ளைகளைப் பெத்தனீ எண்டு நான் உன்னட்ட எப்பவாவது கேட்டனானா? என் நெற்றியில் முத்தமிட்டவள் தனது கைகளைக் கழுவி விட்டு படுப்பதற்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கியிருந்தாள்.. நீண்ட நேரமாக என்னால் நின்ற இடத்தை விட்டு அசையமுடியவில்லை..

# அறுவைப் பக்கம்

ஒருவர் : ஏன் இவ்வளவு அவசரம் அவசரமாகப் பெயிண்ட் அடிக்கிறீர்

மற்றவர் : பெயிண்ட் முடிய முதல் அடிச்சுவிட வேண்டும் என்பதற்காகத்தான்

■ ■ ■

டொக்ரர் : நீங்கள் எப்பொழுதுமே இப்படித் தான் திக்குவீர்களா?

நோயாளி: எப்பொழுதும் இல்லை. டொக்டர் பே.... பே.. சு..ம் பொழுது ம.... மட்..டு...ந்தான்.

■ ■ ■

தந்தை: எக்ஸாம் ஹாலிலே நித்திரை கொண்டுட்டு வாரன் என்றியே, வெக்கமில்லையே.

மகன்: நீங்க தானே அப்பா கேள்விகளுக்கு விடை தெரியேல்ல எண்டா முழிச்சுட்டு இருக்காத எண்டு சொன்னீங்க.

■ ■ ■

ஒருவர்: ரொணி பிளெயரை நாங்க தூங்குங்கள் என்று சொன்னால் தூங்கமாட்டார்.

மற்றவர்: ஏன்? அவர் பிடிவாதக்காரரா?

ஒருவர் : இல்லை அவருக்குத் தமிழ் தெரியாது.

■ ■ ■

ராஜா: பக்கத்து வீட்டுக்காரர் ஓசிப் பேப்பர் கேட்கிறா ரெண்டு பேப்பரை நிறுத்தியது பிழையா போச்சு.

ரதன் : ஏன்?

ராஜா: இப்ப நியூஸ் பாத்திட்டு தாரனெண்டு டி.வி.ஐ ஓசியா கேட்கிறார்.

■ ■ ■

ஆசிரியர்: எங்கே ஆங்கில எழுத்துகளை வரிசையாச் சொல்லு.

மாணவன்: பி, சி, டி, இ, எப்,....

ஆசிரியர்: டேய்! ஏன் முதல் எழுத்து ஏ-ஐ விட்டுட்டாய்.

மாணவன்: அது வயது வந்தவங்களுக்கு மட்டும் தானே சேர்.

■ ■ ■

டாக்டர்: நாய் கடிச்சா தொப்புளைச் சுத்தி 14 ஊசி போடோணும்.

நோயாளி: முடியாது டொக்டர். நாய் ஓடிப் போட்டுது.

■ ■ ■

ரேணு: அவயள் ரெண்டு பேருக்க என்ன சண்டை.

பானு: அவேக்க ஆயிரம் இருக்கும்.

ரேணு: அப்ப ஆளுக்கு ஐநூறா பிரிக்கிறதுதானே !

■ ■ ■

ஒருவர்: எதுக்காக அண்ண இப்படி வேகமாகப் படியால இறங்குறீங்க?

மற்றவர்:என் கடிகாரம் மாடியிலிருந்து விழுந்திட்டுது,

ஒருவர்: இப்ப கீழ விழுந்திருக்குமே ?

மற்றவர்: இன்னும் விழுந்திருக்காது, அது அஞ்சு நிமிஷம் லேட் !

■ ■ ■

டேய் ரவி எனக்கு வாழ்க்கையில ஒரு பிடிப்பு இலலாமல் போட்டுது தற்கொலை செய்யப்போறனடா

டேய் இதுக்கெல்லாம் தற்கொலை செய்யாத, ஒரு கல்யாணம் பண்ணு, அது காணும்.

■ ■ ■

## ஒரு ஆணை நிராகரிக்க, பெண்கள் சொல்லும் தலையாய காரணங்கள்

உன்னை சகோதரனாகவே நினைத்துக் கொண்டிருக்கிறேன்.
*(நீ அசிங்கமாக இருக்கிறாய்)*

நமக்குள் ஒரளவுக்கு வயசு வித்தியாசம் இருக்கிறது
*(நீ என் அப்பா மாதிரி இருக்கிறாய்)*

என் வாழ்க்கை தற்சமயம் மகா சிக்கலாக இருக்கிறது
*(எனக்கு நிறைய ஆண் நண்பர்கள் இருக்கிறார்கள்)*

எனக்கு ஏற்கெனவே ஒரு ஆண் நண்பன் இருக்கிறான்
*(உன்னைப் பார்த்தால் என் வீட்டுப் பூனையும் ஐஸ்கிரீமுமே மேல்)*

வேலைத்தளத்தில் ஒருவரை காதலிப்பதை விரும்பவில்லை
*(நீ உலகத்திலேயே ஒரே ஆணாக இருந்தாலும் உன்னை காதலிக்க முடியாது)*

நீ காரணமில்லை, நான்தான் காரணம்
*(நீதான் காரணம்)*

(இப்போதைக்கு வேலையில் முன்னேற உழைக்கிறேன்
*(மகா அலுப்படிக்கும் என் வேலையே உன்னை விட பரவாயில்லை)*






இனி ஒரு துணி நெய்வோம்
அதை என்னாளும் உடுப்போம்

தனியொருவனுக்கு ஒரு துணி
இல்லை எனில் — அந்த

ஊர் சனத்தின் உடுப்பை எல்லாம்
கிழிப்போம்

— *பாரைதீ*

### *சில FUN மொழிகள்*

*உன் அப்பா ஏழையாக இருந்தால், அது உன் விதி. உன் மாமனார் ஏழையாக இருந்தால் அது உன் மடத்தனம்.*

*'உன் எதிர்காலம் உன் கனவில் தான் இருக்கிறது' ஆகவே தூங்கு.*

*பக்கத்துவீட்டுக்காரர்களிடம் அன்பு செலுத்து. ஆனால் மாட்டிக்கொள்ளாதே*

*நான் பிறக்கும்போது புத்திசாலியாகத்தான் பிறந்தேன். பள்ளிக்கூடம் என்னை முட்டாளாக்கி விட்டது.*

*மற்றவர்களுக்கு உதவி செய்வதற்குத்தான் நாம் இருக்கிறோம் என்பது உண்மையானால், மற்றவர்கள் இங்கு எதற்காக இருக்கிறார்கள்*

## எதுக்கும் ரைம் வேணும்

என்ர பிரண்ட் கோணேஸ நேற்று மக்டொனாஸில கண்டனான் beef burger அடிச்சுக் கொண்டு . . தான் பெரிசா மாடு சாப்பிடுறேல எண்டான்.

நீ மட்டுமில்ல ஒருத்தரும் பெரீ..சா மாடு சாப்பிடேலா எண்டு சொல்ல, உனக்கொரே பகிடிதான் எண்டவன் போனகிழமைதான் முதல் முதலா மாடு சாப்பிட்டவனாம். ஏனடா உன்ர சமயத்தில சொல்லி இருக்கோ எண்டு கேக்க, இல்ல தனக்கு ரைம் கிடைக்கிறேல எண்டுறான், இவனை என்ன செய்யிறது.

## ஆண்-பெண் உறவில் விரிசல்

அண்மைக் காலங்களாக பெண்ணினக் குரங்குகள் லண்டனை நோக்கி படையெடுத்த வண்ணம் உள்ளன. பெண்ணினக் குரங்களின் கண்களில் புலம்பெயர்ந்த தமிழ் இளைஞர்கள் ஒரிஜினல் குரங்குகளை விட மிகவும் அழகாகத் தெரிவதாகவும், புலம்பெயர்ந்த தமிழ் இளைஞர்களின் அழகான குறுந்தாடிகளும் முடிவெட்டுக்களுமே இதற்கு முக்கிய காரணமாக கருதப்படுகிறது. இம்மாத இறுதியில் இவர்களுக்கான ஓர் ஒன்றுகூடல் இடம்பெறலாம் எனவும் அதில் பெண்ணினக்குரங்குகள் மினுக்கி கினுக்கி கொண்டு வருவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. போராட்டம் நடத்த வேண்டிய நிலைக்கு தாம் தள்ளப்பட்டுள்ளதாக ஒரிஜினல் ஆணினக் குரங்குகள் கருத்து தெரிவித்து இருக்கின்றன. றெஸ்பெக் மாண்...

## அடி தர்ம அடி

அஜித்தின் திருமணநாளில் அவன் தான் தன் மனைவியை விட மாற்றான் மனைவியுடன் அதிக காலம் வாழ்ந்ததாகச் சொல்லி ஒரு குண்டு போட்டான், பின் அவனே அது வேறுயாருமல்ல என் தாயாருடன்தான் என்றான். இதை கவனமாக கேட்ட ராம் தன் திருமண நாளில் இதை கொப்பி அடித்து அதே குண்டைப் போட்டான், எல்லோரும் பதறிப்போய் யாரது? என்று கேட்க அது வேறுயாருமல்ல அஜித்தின் அம்மாதான் என்றான் மறுகணம் அங்கே புகை கிளம்பியது.

## மேலோக மணிக்கூடு

எங்கட பெடியர் ஒராள் மேலோகம் போயிருக்கிறார், வாசலில வலப்பக்கமாக ஒரு சுவரில கனக்க மணிக்கூடுகள் இருந்திருக்குது, அதென்ன மணிக்கூடு எண்டு, பெடியர் வாசல் காவலாளியிடம் கேக்க, காவலாளி, அது பொய் மணிக்கூடு உலகில் உள்ள எல்லாருக்கும் ஒண்டு இருக்குது ஆக்கள் பொய் சொல்லச்சொல்ல அதின்ர கம்பிகள் கொஞ்சம் கொஞ்சமாய் நகரும் எண்டான்?, அது ஆற்ற மணிக்கூடு அசையவே இல்லை எண்டு பெடி கேக்க அது அன்னை திரேசாவின்ர என்று பதில் வந்தது. பெடியர் உடன கேட்டிருக்கிறார் டக்ளஸ் தேவானந்தாவின் மணிக்கூடு எங்கே எண்டு, அது சிவபெருமானின்ர கந்தோரில கிடக்குது எண்டான் காவலாளி, ஏன்? கேட்டார் பெடியர், அவற்ற fan பழுதாப்போட்டுது அதான் அங்க பாவிக்க கொண்டு போட்டாங்கள் எண்டான் காவலாளி.

## பூர்வீகம் தேடிச் செல்வோருக்கு தித்திப்புச் செய்தி

சொந்த ஊர் பார்க்க தமிழீழம் செல்வோர் பலரும் இடம் வலம் தெரியாமல் தங்க இடமின்றி அல்லல் பட்டுத் திரிகின்றனர். அவர்கள் இன்னல் தீர்க்க முன்வந்திருக்கின்றது இன்பப் பயணம் ரவல்ஸ். முன்கூட்டியே பதிவு செய்தால், குறைந்த கட்டண தங்குமிட வசதியோடு, நீங்கள் அல்லது உங்கள் தாய் தந்தையர் பிறந்த வைத்தியசாலை, வாழ்ந்த வீடு, படித்த பாடசாலை, வழிபட்ட கோவில் (கட்டிடமாக இருந்தால் கட்டிடங்கள் அல்லது சுவடுகள்) என்பனவும் சுற்றிக் காண்பிக்கப்படும். விரும்பினால் உங்கள் நெருங்கிய உறவினர்களும் கண்டுபிடித்துக் கொடுக்கப்படுவர். உறவினர் ஒருவருக்கு £50 அறவிடப்படும்.

## தமிழ் தெரிந்தவருக்கு வேலைவாய்ப்பு

London முதியோர் இல்லங்களில் வாழும் முதுதமிழர்களுக்கு பணிபுரிய தமிழ் தெரிந்த தமிழர்கள் தேவைப்படுகின்றனர். அரைகுறையாகவேனும் தமிழைப் புரிந்து கொள்ளும் ஆற்றலும், வாசிப்பு, எழுத்து அறிவும் கொண்டிருத்தல் வேண்டும். தமிழில் உயிர் எழுத்துகள் எழுத வாசிக்கத் தெரிந்திருந்தால் போதுமானது. மெய் எழுத்துகள் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வளங்கப்படும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி info@palasukal.com.

## சேலை கட்டலையோ சேலை

லண்டன் தமிழ் இனத்தின் வழித்தோன்றலாக வாழும் பெண்கள் மத்தியில் சேலை கட்டுதல் மிக அபூர்வமாகி விட்ட நிலையில், சடங்குகளுக்காக சேலை கட்ட விரும்பும் சிலரும் சேலை கட்ட முடியாமல் திண்டாடுவதைத் தவிர்க்க 'கொங்காரா' நிறுவனம் சேலை கட்டும் நிபுணர் ஒருவரை தமிழ் பேசும் நாட்டில் இருந்து தருவித்துள்ளார்கள்.

கட்டண விபரங்கள் வருமாறு . . .

நூல் சேலை கட்ட -£50

காஞ்சிப்பட்டு சேலை கட்ட - £200

*பின் குறிப்பு:* இந் நிறுவனத்தில் சேலை வாங்குவோருக்கு முதல் கட்டல் கட்டணமின்றி கட்டிவிடப்படும்

# சினித்துளி

## கணக்கு போடும் அஜீத்?



இழந்த மார்க்கெட்டைப் பிடிக்க தீவிரமாகி விட்டார் அஜீத்.வில்லன் படத்துக்குப் பின்னர் அவர் நடிக்கும் எந்தப் படமும் வெற்றியடையவில்லை. ஜீனியர் நடிகர்கள் படு பாஸ்ட்டாக மார்க்கெட்டைப் பிடித்துக்கொண்டு விட்டனர். நீண்ட நாட்களாக தயாரிப்பில் இருந்து வந்த ஜி, மிரட்டல், அட்டகாசம் ஆகிய மூன்று படங்களில் இப்போது நடித்துக் கொண்டிருக்கிறார் அஜீத். இந்த மூன்று படங்களையும் வரிசையாக வெளியிட்டு தனது மார்க்கெட்டை பிடித்துவிடலாம் என அஜீத் கணக்கு போடுகிறாராம்.

## ஐஸ்வர்யாராய் ஒரு புதுவரவு!



பாலிவுட் சூப்பர்ஸ்டாராக விளங்கும் ஐஸ்வர்யா ராய் (30), ஹாலிவுட் பிரபல நட்சத்திரம் மெரில் ஸ்ட்ரீப்புடன் இணைந்து கேவோஸ் என்ற படத்தில் நடிக்கவுள்ளார். சிங்குலாரிட்டி என்ற மற்றுமொரு ஆங்கிலப்படத்திலும் அவர் நடிக்கவுள்ளார் என்று சண்டே டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது. இப்படத்தை ஆஸ்கர் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட இயக்குநர் ரோலண்ட் ஜோசப் இயக்குகிறார்.

## நடிகர்களுக்கு ஒரு கடிவாளம்!

எகிறிக்கொண்டே போகும் ஹீரோக்களின் சம்பளத்தை இழுத்துப் பிடிக்க தயாரிப்பாளர்களும் படித்த வித்தையெல்லாம் பிரயோகித்துப் பார்த்து விட்டார்கள். கடைசியாக இப்பொழுது புதிய அஸ்திரத்தை கையிலெடுத்திருக்கிறார்கள்.நடிகர்களின் சம்பளத்தை பணமாக கொடுப்பதில்லை என்றும் பதிலாக குறிப்பிட்ட ஏரியா உரிமையை கொடுப்பது என்று தீர்மானித்திருக்கிறார்கள். படம் ஹிட்டானால் பணம். இல்லையெனில் பட்டை நாமம். இந்த பொறி ஐடியாவை ஒரு தீர்மானமாக நிறைவேற்ற இருக்கிறார்கள் தயாரிப்பாளர்கள்.

## ஷங்கரின் காதலில் சந்தியா !?



ஷங்கர் தனது புதிய படத்தில் சந்தியா என்ற கேரளத்து அழகுக் கிளியை அறிமுகப்படுத்துகிறார். சந்தியாவைப் பார்த்தால் பரவசப்பட மாட்டீர்கள், துள்ளல் போட மாட்டீர்கள். ஆனாலும் உங்களுக்கு ரொம்பவே பிடித்துப் போகும் என்கிறார் ஷங்கர். சந்தியா பார்ப்பதற்கு 12ம் வகுப்பு மாணவி மாதிரி படு ஹோம்லியாக இருக்கிறார். சின்னப் பொண்ணாச்சே என்று நினைத்தால் காதல் காட்சிகளில் புகுந்து விளையாடுகிறாராம். நீண்ட நாட்களுக்குப் பின் ஒரு எதார்த்தமான ஹிரோயின் கிடைத்துள்ளார் என்கிறது சூட்டிங் யுனிட்.

## அகில இந்திய சிறந்த நடிகர்!



பிதாமகன் படத்தில் சிறப்பாக நடித்ததற்காக நடிகர் விக்ரமுக்கு அகில இந்திய சிறந்த நடிகருக்கான விருது வழங்கப்பட இருக்கிறது. ஜனாதிபதி அப்துல் கலாம் இந்த விருதை வழங்குகிறார். விக்ரம் கதைக்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டு நடிக்கும் நடிகர். சேது, காசி, பிதாமகன் படங்கள் இதற்கு சாட்சி. வசனமே இல்லாத ஒரு வெட்டியான் கேரக்டரில் நடித்து அதை இந்தியா முழுவதும் பேச வைத்த பெருமை இயக்குனர் பாலா நடிகர் விக்ரம் இருவரையும் சாரும். ஆனால் அந்த அன்பே சிவத்தாருக்குப் பிறகுதான் எதுவும் என்பது சிலரது கருத்து.

# த்ரிஷா! wassup



நடிகை த்ரிஷா தற்கொலை செய்து கொண்டார், நடிகர் விஜயைக் காதலிக்கிறார், அப்பாவை வீட்டை விட்டு துரத்தி விட்டார், அப்பா ஹோட்டலில் சர்வர் வேலை பார்க்கிறார், அம்மாவும் பொண்ணும் சேர்ந்து பைவ் ஸ்டார் ஹோட்டல்களில் ஊத்துகிறார்கள் என்று த்ரிஷாவைப் பற்றி பல தரப்பட்ட செய்திகள் இறக்கை முளைத்து பறந்தபடி இருக்கின்றன.

சென்னையிலேயே வசித்தாலும் அம்மாவும் பெண்ணும் தனித்தனியாகவே வீடுகளில் வசிக்கிறார்கள். இதை வைத்தும் பல வதந்திகள் கோடம்பாக்கத்தில் சுற்றிச் சுற்றி வருகின்றன.

அதே போல சமீபத்தில் கில்லி படத்தின் வெற்றிக்காக த்ரிஷா பைவ் ஸ்டார் ஹோட்டலில் கொடுத்த ஒரு பார்ட்டிக்கான சில லட்சபில்லை ஒரு தயாரிப்பாளர் செட்டில் செய்தாராம். இதனால் அவருக்கும் த்ரிஷாவுக்கு அது என்று செய்தி பரவியது. மேலும் தெலுங்கில் படத்துக்கு ஆந்திராவில் சூட்டிங்கில் இருந்தால் விஐபிக்கள் அவரைப் பார்க்க வந்துவிடுகிறார்கள் என்கிறார்கள். த்ரிஷாவுக்கு என்னாச்சு என்று அஜீத், தரணி, விஜய், பிரகாஷ்ராஜ், ஏ.எம்.ரத்னம் என் திரையுலகின் முக்கியப் பிரமுகர்கள் எல்லாம் தொலைபேசியில் அழைத்து விசாரித்துள்ளார்கள்.

என்னதான் ஆச்சு என்று த்ரிஷாவைக் கேட்டால், இது பற்றிய கவலை எதுவும் இன்றி ரிலாக்ஸாகவே பதில் தருகிறார்.

முதலில் இந்த விஷயங்களைக் கேட்கும்போதுதான் அதிர்ச்சியாக இருந்ததது. பிறகு இதை சுலபமாக ஏத்துக்கிட்டேன். எம்.பி.ஏ முடித்துவிட்டு ஆஸ்திரேலியாவில் குடியேறிவிடும் கனவில் இருந்தேன். 1999ம் வருடம் மிஸ் சென்னை பட்டம் கிடைத்த பிறகு வாழ்க்கையே மாறிவிட்டது. லேசா லேசா படத்தில் சின்ன ரோலுக்காக பிரியதர்ஷன் கூப்பிட்டபோது மறுக்க முடியவில்லை. அப்புறம் படங்கள் வரிசையாக ஹிட்டாகி தமிழ், தெலுங்கு என பிஸியாகி விட்டேன். நான் இந்த வாழக்கையை சந்தோஷமாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறேன். என் வளர்ச்சியைப் பொறுக்காத சிலர்தான் வதந்திகளைக் கிளப்பிவிடுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

அப்பா ஒரு பெரிய ஹோட்டலில் உயர் அதிகாரியாக வேலை செய்கிறார். அது எனக்குப் பெருமைதான். பிறகு இந்தக் காதல். முதலில் ஜோதிகிருஷ்ணாவுடன் காதல் என்றார்கள். பிறகு சிம்புவுடன் இணைத்துப் பேசினார்கள். இப்போது விஜய். நட்பாக இருப்பது தப்பா? எந்தப் பிரச்சினை வந்தாலும் நான் தைரியமாக சமாளிப்பேன் என்கிறார் த்ரிஷா.



# ஹோலிவூட்டைக் கலக்க ஒரு தமிழர்?

பாலா

'I see dead people' இந்த வரிகளைச் சொன்னாலே, The Sixth Sense படமும் அதன் இயக்குநரான மனோஜ் சியாமளனும் நினைவுக்கு வருவார்களாம். 1999 ஆகஸ்ட் 6 அன்று வெளியாகி சினிமா சரித்திரத்தில் பெரும் மாறுதல்களை உருவாக்கிய படமிதாம். இப்போதெல்லாம் ஆகஸ்ட் மாதங்களிலும் முக்கியமான படங்கள் வெளிவருவதற்கான காரணம் சியாமளனின் சிக்ஸ்த் சென்ஸ் தானாம்.


யார் இந்த சியாமளன்? என்று அலசியபோது பிறப்பு பெயர் மனோஜ் நெல்லையாத்து சியாமளனென்றும் பின் இதனை மனோஜ் நைட் சியாமளன் என்று மாற்றிவிட்டாரென்றும் தெரியவருகிறது. இவர் 1970 ஆம் ஆண்டு ஆவணி 6ம் திகதி இந்தியாவின் பாண்டிச்சேரி என்னும் ஊரில் ஒரு வைத்தியத் தம்பதியினருக்கு மகனாக பிறந்து அமெரிக்காவில் பிலடெல்பியா என்னும் இடத்தில் வளர்ந்து இப்போ பென்செல்வேனியாவில் வசித்து வருகிறார். எட்டு வயதில் கமெரா எடுத்து படம் எடுக்கத் திரிந்தவர், தனது 17வது வயதிற்குள் 45 குறும்படங்களை எடுத்து தள்ளிவிட்டார்.தனது 22வது வயதில் கலைத்துறையில் பட்டம் பெற்றார். 23வது வயதில் புவனா என்னும் வைத்தியரைத் திருமணம் செய்தார். 2 குழந்தைகள். மனைவி மற்றும் 9 குடும்ப அங்கத்தவர்கள் MDக்கள்,PhDக்களாக இருக்க இவர் ஒருவர் சினிமாவுக்கு வந்திருக்கிறார். திரைக்கதை எழுத 5 மில்லியன் டொலர் வாங்கி இருக்கிறார், என்று பட்டியலே நீளுகிறது. இவருடைய The Sixth Sense, Unbreakble, The Signs ஆகிய மூன்று திரைப்படங்கள் இவரை எங்கோ கொண்டு சென்றன. 'Signs' வந்தபோது நியூஸ் வீக்கில் இவரை 'Next Spielberg' என்று பட்டயம் கொடுத்து அட்டைப் படக்கட்டுரை எழுதி இருந்தார்கள். The Sixth Sense' 'Unbreakable' 'Signs மூன்று படங்களிலும் கவர்வது காட்சிகளை வடிவமைத்திருந்த விதம்தான். எல்லோரும் கணினிகளை வைத்துக்கொண்டு வித்தை காட்டிக்கொண்டிருக்கும் இந்த நாட்களில் மனிதர்களை நடிக்க வைக்கிறார் சியாமள்ன்.இப்போ வெளியாகி உள்ளது 'The Village', வெளியான முதல்வாரக் கடைசியில் ஏறக்குறைய ஐம்பது மில்லியன் சம்பாதித்து முதலாம் இடத்தில் இருக்கிறதாம். என்ன கதை? முடிந்தவரை சுவாரசியம் கெடாமல் சொல்லுகிறேன்.

பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கிராமம். Amish மக்களைப்போல தம் கையால் எல்லாவற்றையும் தயார் செய்து பிழைக்கும் மக்கள். சுற்றி இருக்கும் அடர்ந்த காடுகளில் 'Those who we dont speak of' என்று படம் பூராவும் கிசுகிசுக்கப்படும் உயிரினங்கள் வாழ்கின்றன. காட்டுவாசிகளும் கிராமவாசிகளும், இருக்குமிடத்தில் இருந்துகொண்டால் சௌக்கியமே என்று இருக்கிறார்கள். ஆனால், திடீரென்று கிராமத்தில் வளர்ப்புப்பிராணிகள் கொல்லப்படுகின்றன. சிவப்பு நிறம் காட்டில் வாழும் உயிரினங்களை கோபமடையச் செய்யும் என்று கருதும் அக் கிராம வாசிகளின் வீட்டுக் கதவுகளில் சிவப்பு நிறம் தெளிக்கப்படுகிறது. காட்டினூடாகச் செல்லமுடியாமல் இருக்கும் அக்கிராமத்தில் மருத்துவ வசதிகளின்றி இறப்புகளும் இழப்புகளும் பல வருடங்களாகத் தொடர்கின்றன. ஒருவன், தான் அக்காடுகளினூடாகச் சென்று மருந்துகளைப் பெற்றுவருவதாகச் சொல்கிறான். கிராமத்துப் பெரியவர்கள் சம்மதிக்கிறார்களா? பிறகு என்ன நடக்கிறது என்பதுதான் படம்.

எல்லோரும் நிறைவாக நடித்திருந்தார்கள். கண்பார்வையில்லாத Ivy Walker ஆக வரும் Bryce Dallas Howard நிறைவாகச் செய்திருந்தார். முதல் படம் என்றே சொல்லமுடியாத அருமையான நடிப்பு. 'The Pianist'இல் ஆஸ்கர் விருது பெற்ற Adrian Brody இப்படத்திலும் பாத்திரத்தின் தன்மையுணர்ந்து நடித்திருந்தார். அதிக வசனங்கள் இல்லையென்றாலும், தன் பாத்திரத்தின் குணாதிசியங்களை நன்கு வெளிக்கொணர்ந்திருந்தார். காமராவும், இசையும் படத்திற்கு கனம் சேர்த்திருந்தன.

முன்பே சொன்னதுபோல அதிரடி ஆர்ப்பாட்டப் படங்களின் நடுவே தெளிந்த நீரோடை போல கவனத்தைக் கவரும் படமிது. கதை, திரைக்கதை அமைப்பிலும் கொஞ்சம் கவனம் செலுத்தியிருந்தால் 'Those who we dont speak of இன்னுமொரு 'I see dead people' ஆக இருந்திருக்கும்!

# சினிமா



# வசூல்ராஜா M.B.B.S.

இது விமர்சனம் அல்ல

அந்த நடுஇரவுக்கு வசூல்ராஜாவைப் பார்க்க போகவேண்டுமோ என்றுதான் இருந்தது. பம்மல் கே சம்பந்தம் பஞ்சதந்திரம் தந்த வெறுப்புத்தான் அப்படி யோசிக்க வைத்தது. அன்பேசிவம், விருமாண்டி நினைவில் தட்டுப்பட்டதால் பார்க்கலாம் என்று போனேன். கமல் எங்களை ஆகா ஓகோவென்று புகழ விடவில்லை ஆனால் ஏமாற்றியும் விடவில்லை, மற்றும் கமலின் வழமை போலவெ மானிட நேயத்தை உயர்த்தி பிடிக்கின்ற ஒரு திரைப்படம். ஆதலினால் ஆயிரம்முறைக்குமேல் கமலை மெச்சவேன். முன்னபாய் ஆடீஉயு என்று இந்தியில் பெருவெற்றி பெற்ற ஒரு திரைப்படத்தை வசூல்ராஜாMBBS என்று தமிழாக்கியிருகிறார் கமல். முன்னபாயை நாங்கள் பார்த்திலோம். வசூல்ராஜாவை பார்த்து சிரித்தோம்.

இதனை தமிழ் படுத்தியே ஆகவேண்டும் என்று அப்படி ஒன்றும் வாழ்வை வியந்து போற்றுகின்ற திரைப்படம் அல்ல ஆனால் கமல் தனக்கு உவப்பான சமுகத்திற்கு தேவையான கருத்தினைச்சொல்ல தேடிஎடுத்த திரைக்கதை இது. 'கடவுளை நம்புகிறவனும் நல்லவன் கடவுளை நம்பாதவனும் நல்லவன் ஆனால் தான்தான் கடவுள் என்கிறானே அவன்தான் மகாமோசமானவன்?' என்று திரைப்படத்?தில் கமல் பேசுவதாக ஒரு வசனம் வருகின்றது. இப்படி பலப்பல பளிச்சிடுகின்ற வசனங்கள் இந்தப்படத்தில். கமலில் முக்கியமான திரைப்படங்களில் இப்படி வசனம் வருவதுண்டு. கமல் தனக்கு விருப்பமான செய்திகள் (ஆநளளயபந) சொல்லவே திரைப்படங்கள் எடுப்பதுண்டு. அவ்வாறு தயாரிக்கப்படும் திரைப்படங்கள் ஆழமான கருத்துக்களைச் சொல்லிவிடும். எல்லாத்திரைப்படங்களும் அல்ல, சில குறிப்பிட்ட திரைப்படங்கள். தேவர்மகன், மகாநதி, ஹேராம், அன்பேசிவம், விருமாண்டி முதலான திரைப்படங்கள் இந்தவகையானவை. இந்த திரைப்படங்கள் சொல்லவந்த செய்திகள் மிக வலிதானவை.

தேவர்மகன்: கிராமத்தை நோக்கி நகர்த்தல். அங்குள்ள சாதிப்பூசல்களைக் களைதல், கிராமத்தை சுத்தப்படுத்தல், கிராமத்து வன்முறைகளை நிராகரித்தல், பிராமணியத்தினை அம்பலப்படுத்தல்.

மகாநதி: கிராமத்தை விட்டு நகரை நோக்கி நகர்த்தவதால் வரும் பாதகம், நகரின் சிரழிவு, சொந்தமண்ணில் காலுன்றி நிற்கவேண்டிய அவசியம், பிராமணியம் அம்பலப்படவேண்டும் ஆனால் பிராமணர்களல்ல.

ஹேராம்: காந்தியத்தின் தோல்வி, இந்துத்துவாமீதான கண்டனம், இந்து-முஸ்லிம் உறவில் சௌஜன்யம், இந்தியதேசிய அரசியல்வாதிகளை அம்பலப்படுத்தல், பம்பாய் திரைப்படம் மீதான மறுப்பு, மற்றும் அதற்கான பதில்.

அன்பேசிவம்: கொம்யுனிசம் மீதான பற்று, உலக மயமாக்கலுக்கான எதிர்ப்பு, ஆத்திகவாதம், நாத்திகவாதம் மீதான விமர்சனம், மனிதாபிமானம், மானிடம் மீ தானகாதல், மற்றும் பாபா திரைப்படத்திற்கான பதில்.

## 'தான்தான் கடவுள் என்கிறானே! அவன்தான் மகா மோசமானவன்'

விருமாண்டி : தமிழ்தேசியம் மீதான அக்கறை, மரணதண்டனையை மறுத்தல், பெரியாரியம் வெளிப்பாடு, தமிழிச்சியின் வீரம், நிலத்தின்?மீது பற்று, கிராமத்து இதயத்தினை பதிதல்.

இப்படியெல்லாம் சிறுகுறிப்புத் தருவது கமலைப் புரிந்துகொள்ள உதவுமேயன்றி, அதற்குமேல் வேறொன்றுமி?ல்லை. இவ்வளவு ஆழமான கருத்துக்களும் செய்திகளும் வசூல்ராஜாவில் இல்லை. சிரித்துச்சிரித்து சில செய்திகள் ஊசிபோல் குத்தப்பட்டது. மனிதநேயம் என்பதே வசூல்ராஜாவின் செய்தி.

ஒரு புறம் மனிதர் சிலர் ஊழல் செய்கிறார்கள், வஞ்சனை புரிகிறார்கள். மனிதரை, மனிதத்தை அழிக்கிறார்கள். அதிகாரம் செலுத்துகிறார்கள். அடக்குமுறை, அட்டகாசம், அட்டுழியம் செய்கிறார்கள். இது ஒருவகை என்றால் மறுபுறம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மை, உண்மை, என்று சில ஒழுக்கக் கோவைகளால் மனிதரை மறந்த விடுகிறார்கள். மனிதத்தினை தூக்கி நெருப்பில் போட்டு விடுகிறார்கள்.

இதனை விமர்சிக்கின்ற திரைப்படம்தான் வசூல்ராஜா. அது காட்டமான விமர்சனம் அல்ல, கவலைகளை மறந்து சிரித்து இரசிக்ககுடிய விமர்சனம். வசூல்ராஜா பார்க்கவேண்டிய திரைப்படம். அவ்வாறே நல்லன சொல்ல விரும்புகின்ற, நல்லன செய்ய விரும்புகின்ற, மானுடம் மிகுந்த கலைஞர் கமலகாசன் தோற்கக்கூடாது. தோற்றால், நல்ல கருத்துக்களைச் சுமந்த கலைஞரும், தோற்றால், தமிழ்த்திரை உலகில், இப்போதைக்கு நல்ல கருத்துக்கள் தோன்றும் வாய்ப்பே இல்லை. கமலகாசனை நாங்கள் தோற்கவிடப்போகிறோமா.

# பாய் . . பாய் . . ஜக்குபாய்!



ரஜனியின் 'ஜக்குபாய்' கதை விவாதம் பாதியில் திடீரென நிறுத்தப்பட்டு, அடுத்த நிலைக்கு நகருமா என்பது கேள்விக் குறியாகி உள்ளதாம். படப்பிடிப்பு ஜூன், ஜூலை, ஆகஸ்ட் என்று பல மாதங்கள் பின் தள்ளப்பட்டு இப்போது அடுத்த ஆண்டு ஜனவரிக்கு ஒத்தி வைக்கப்பட்டுவிட்டதாக சொல்கிறார்கள்.

கதாநாயகியாக ஐஸ்வர்யா ராயே நடிக்க வேண்டும் என்று ரஜினி விரும்புவதால் (ஐய்... யோ, இருந்தாலும் இது ரொம்...ப ஓவர்) அவரது கால்ஷீட் அட்ஜஸ்ட்மெண்ட்டுக்காக படப்பிடிப்பு தள்ளிப் போனதாக முதலில் சொல்லப்பட்டது.

ஐஸ்வர்யா ராய் ரொம்பவே பிஸி என்பதாலும், அவர் மிகவும் லெவல் அடிப்பதாலும் (இருக்காதா பின்ன..) பூமிகாவை ஹிரோயினாக்கி செப்டம்பரில் சூட்டிங்கைத் தொடங்கிவிடலாம் என இயக்குனர் ரவிக்குமார் யோசனை சொல்ல பூமிகாவிடம் கால்ஷீட் பெறப்பட்டதாம்.

இந் நிலையில் திடீரென கதை விவாதத்தையே நிறுத்தச்சொல்லிவிட்டாராம் ரஜினி (கதம்-கதம்). பெங்களூரில் வைத்து ஸ்கிரிப்ட் பில்ட் அப்பில் இருந்த கே.எஸ். ரவிக்குமாரும், ரமேஷ் கண்ணா உள்ளிட்ட அவரது அசிஸ்டெண்ட்களும் அந்தப் பணியை அப்படியே நிறுத்திவிட்டனர்.

இப்படி ஜக்குபாய் கதை விவாதம் நிறுத்தப்படுவது இது இரண்டாவது முறையாம் (ஆக இரண்டு தரம் தானா) இப்போதைக்கு நேரம் சரியில்லை என்பதால், பூஜை புனஸ்காரங்கள், ஆலய வழிபாடுகளை முடித்துவிட்டு சூட்டிங்கை ரஜினி தொடரத் திட்டமிட்டுள்ளாராம் (நானும் ஏதோ சாமியாராகப் போரார் என்று நினைத்தேன்). இது இப்படி இருக்க 'கில்லி' வெற்றிப் படத்தை தந்த தரணி திடீரென ரஜினியின் அழைப்பின் பேரில் அவரை சந்தித்தாராம் என்று சொல்கிறார்கள். (அப்ப கே.எஸ்.ஆர்க்கு சங்குதானா?) ஏற்கனவே ரெடியான 'ஜக்குபாய்' கதையை கொஞ்சம் மாற்றி எடுக்கலாம் என தரணி யோசனை சொன்னதாகவும், அதே நேரத்தில் ரஜினிக்காக புதுக்கதை ஒன்றையும் சொல்லிவிட்டு வந்திருக் கிறாராம் தரணி. கே.எஸ்.ரவிக்குமார் தரப்பில் கேட்டால், 'ஜக்குபாய்' படப்பிடிப்பு அடுத்த ஆண்டு ஜனவரியில் தொடங்கும் என்று செய்தி கசிய விடுகிறார்கள். ஆக 'ஜக்குபாய்' அப்படியே வந்தாலும் சரி அல்லது ஜக்கை விட்டுவிட்டு 'வெறும்பாயாக' வந்தாலும்சரி. வரும்வரை காத்திருப்போம்.

*- சினேகன்*

UNIGLOBE EXCHANGE

BUREAU DE CHANGE
TRAVEL AGENTS

WE BUY AND SELL FOREIGN CURRENCIES
NO COMMISSION / BEST RATES
WORLDWIDE MONEY TRANSFERS
BEST RATE FOR SRI LANKA & INDIA WITHIN 24 HRS SERVICE
BETTER RATE TO SRI LANKA, NO COMMISSION
* over £3000

230B NORTHOLT ROAD
SOUTH HARROW
MIDDLESEX HA2 8DU
TEL: 0208 423 9988

UNIGLOBE exchange & travel

GLOBAL VIDEO&TELCOM

CALL SHOP and VIDEO CLUB
LOW COST INTERNATIONAL CALLS
TAMIL, HINDI VHS and DVD FILMS
RENTING and SALES
VHS TO DVD TRANSFER

230D NORTHOLT ROAD
SOUTH HARROW
MIDDLESEX HA2 8DU
TEL: 0208 423 7744
FAX: 0208 423 8695

සීගිරි
சீகிரி
SIGIRI




தரத்தின் சின்னம்
SIGIRI இப்போது
12 நாடுகளில்
கிடைக்கிறது

தாயக உறவுகளுடன் தரமாக உரையாட ஒரு நிறைவான சேவை

SRI LANKA TELECOM இன் SIGIRI உங்கள் தேவை

**£5 FREE**

open a new home account with £25 and get £5 FREE

enjoy
home comforts
with a Sigiri*Home* account
from Sri Lanka Telecom

සීගිරි
சீகிரி
SIGIRI

call our hotline 24hrs on

**0207 094 9494**

**0800 485 1010**

best prices - best connections - best quality

visit www.sigiri.net



# அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயிலின்

நான்காவது மாபெரும்

# ஆன்மீக ஒன்றுகூடலும் தேர்த் திருவிழாவும்

## 30.8.2004 திங்கட்கிழமை (வங்கி விடுமுறை)



திருத்தேர் பவனி முத்துமாரியம்மன் கோயிலில் இருந்து காலை 9.00 மணிக்கு ஆரம்பித்து Upper Tooting Road, Tooting High Road, Mitcham Road, London Road வழியாக **FIGGES MARSH** மைதானத்தை வந்தடையும். மைதானத்தில் ஆன்மீக சொற்பொழிவு, பக்தி இசைக்கச்சேரி, நாதஸ்வரக்கச்சேரி, மற்றும், பல்கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

மாலை 5.00 மணிக்கு மைதானத்திலிருந்து புறப்பட்டு அதே வழியாக கோயிலைச் சென்றடையும்.



தேர்த்திருவிழாவை முன்னிட்டு தமிழ் மக்களின் தேவைக்குரிய பல பொருட்களை பல்பொருள் அங்காடியில் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

180-186 Upper Tooting Road, Tooting, London SW17 7EJ - Tel: 020 8767 9881 Fax: 020 8767 2337